வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 19.10.2022 புதன்கிழமை | இதழ் : 314 | பக்கங்கள் : 16

# 2023ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு சமர்ப்பிப்பு!

- மாகாணம், உள்ளூராட்சிக்கு ரூ. 85,625 கோடி
- பாதுகாப்பு அமைச்சுகளுக்கு ரூ. 53,920 கோடி
- பௌத்த விவகாரங்களுக்கு ரூ. 373 கோடி
- ஏனைய மதங்களுக்கு 69.1 கோடி ரூபாய்!

கொழும்பு, ஒக்ரோபர் 19

2023ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த செலவு 3 இலட்சத்து 65 ஆயிரத்து 726 கோடியே 56 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாயாக உள்ளது. இதில், 53 ஆயிரத்து 920 கோடி ரூபாய் பாதுகாப்பு துறைக்கான செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தசாசன அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 794 கோடி ரூபாயில் பௌத்த மதத்துக்கு 373 கோடி ரூபாயும் ஏனைய மதங்களுக்கு 69.1 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில், 2023ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக் 15

## சாதாரண தர பரீட்சை பெறுபேறு நவம்பரில்!

கொழும்பு, ஒக். 19

க. பொ. த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் 2022 நவம்பர் மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையால் மாணவர்கள் பிரச்னைகளை எதிர்கொண்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபரால் வழங்கப்படும் அடையாள சான்று ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, பரீட்சைக்குத் தோற்றிய எந்தவொரு மாணவர்களினதும் அடையாளத்தை மீள் சரிபார்க்க வேண்டிய எவ்வித அவசியமும் இல்லை - என்றும் கூறினார். (ஐ)

## மருத்துவர்களின் ஓய்வு வயது நீடிப்பு

கொழும்பு, ஒக். 19

மருத்துவர்கள் ஓய்வு பெறும் வயதை ஒரு வருடத்தால் நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் தகவல்களை அளித்த அவர், இந்த வருடத்தில் 63 வயதைப் பூர்த்தி செய்த மருத்துவர்கள் 15

# எரிபொருள் இறக்குமதி, விநியோகம் சர்வதேச நிறுவனங்களுக்கு அனுமதி!

## எரிசக்தி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 19

பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் திருத்தம் செய்யப்பட்டதை தொடர்ந்து மூன்றாவது தரப்பினரான வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எரிபொருள் இறக்குமதி மற்றும் விநியோகத்துக்கு அனுமதி வழங்கப்படும் - என்று வலுசக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்தார். 15

## யாழ்ப்பாணத்தில் இன்று கன மழைக்கு வாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 19

நேற்றிரவு வங்காள விரிகுடாவில் உருவாகிய மேலடுக்கு சுழற்சி தாழமுக்கமாக மாறும் வாய்ப்புள்ளது. இதனால், யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடுமையான இடிமின்னல் நிகழ்வுகளுக்கும் வாய்ப்புண்டு என்றும் கூறியுள்ளார். 15



## திருமாவளவுடன் சிறீதரன் சந்திப்பு

சென்னை, ஒக். 19

தமிழகம் சென்றுள்ள சி. சிறீதரன் எம். பி. விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், திராவிட முன்னேற்ற கழகத்தின் மூத்த தலைவர் கே. எஸ். இராதகிருஷ்ணன் ஆகியோரை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

தொல். திருமாவளவனுடனான சந்திப்பு 15

## போதை ஆசாமிகளால் அதிகரிக்கும் வன்மங்கள்!

யாழ்ப்பாணம், ஒக். 19

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களால் யாழ்ப்பாணத்தில் இரு துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் முறைப்பாடுகள் மூலமாக அறிய வருகின்றது.

**சுன்னாகத்தில்**

சுன்னாகத்தை சேர்ந்த 15 வயது சிறுமியும் 25 வயது இளைஞரும் காதல் தொடர்பில் இருந்துள்ளனர். இளைஞர் போதைப் பொரு 15

## போதைபொருள் விற்றோரின் கடைகளை மூட நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ். நகரத்தில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதானவர்கள் பணி செய்த இரு வர்த்தக நிலையங்களின் வியாபர அனுமதியை இரத்து செய்வதற்கான நடவடிக்கையை யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் எடுத்துள்ளார். 15

## 22ஆவது திருத்தத்துக்கு விமல் கூட்டணி ஆதரவு!

கொழும்பு, ஒக். 19

அரசமைப்புக்கான 22ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்கப்படும் என்று விமல் வீரவன்ஸ தலைமையிலான 'உத்தர லங்கா சபாகய' வின் தேசிய அமைப்பாளர் 15

## தேர்தல்களை பிற்போட உடன்படவே மாட்டோம்

### பொதுஜன பெரமுன சொல்கிறது

கொழும்பு, ஒக். 19

தேர்தல்களை பிற்போட உடன்படப்போவதில்லை என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். 15

## இப்படியும் நடக்கிறது...!

நோர்வேயின் சிறப்பு சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதியின் காலநிலை தொடர்பான ஆலோசகராக நியமிக்கப்பட்ட விவகாரம் கடந்த ஒரு வாரமாக தெற்கின் ஊடக உலகில் பேசுபொருளாக இருந்தது.

நியமனம் தொடர்பில் எழுந்த சர்ச்சையுடன் கடந்த வாரம் ஜனாதிபதி வழங்கிய மற்றுமொரு நியமனத்தின் அடிப்படையிலும் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு வழங்கப்பட்ட 'உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான தேசிய கூட்டுப் பொறிமுறையின் மூத்த ஆலோசகர்' பதவி.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான தேசிய கூட்டுப் பொறிமுறையின் மூத்த ஆலோசகர் பதவியை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்த போதிலும் அதனை ஏற்க அவர் மறுத்துவிட்டாரெனத் தெரிய வருகின்றது.

கடந்த காலங்களில் உணவுப் பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் போஷாக்கு ஆகியவற்றில் அவர் காட்டிய அக்கறை காரணமாக அவருக்கு இந்தப் பதவியை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விரும்பியிருந்தாராம். ஆனாலும் சந்திரிகா அது தொடர்பில் பெரிதாக ஆர்வப்படவில்லை.

ஒரு காலத்தில் மிகவும் நெருக்கமானவர்களாக இருந்த ரணிலும் சந்திரிகாவும் இருந்தனர். இடையில் ரணில், மகிந்தரப்புடன் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்து, கருத்துவேறுபாடு ஏற்பட்டதாகவும் இந்த நிலைமையை சுமுகமாக்க ரணிலுடன் மிகவும் நட்பான வர்த்தகர் ஒருவர் இரவு விருந்து ஒன்றைத் தயார் செய்திருந்தார் என்றும் சிங்கள பத்திரிகை ஒன்றின் பத்தி எழுத்தாளர் தனது பத்தியில் எழுதியிருந்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து சந்திரிகாவுக்கு தொலைபேசி மூலம் அழைப்பெடுத்த அதிகாரி ஒருவர், உணவு பாதுகாப்பு மற்றும் குழந்தை போஷாக்கு தொடர்பிலான சிறப்பு கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருப்பதாகவும் அதில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுத்திருக்கிறார். இதனால் கடும் ஆத்திரமடைந்த சந்திரிகா, தான் ஜனாதிபதி செயலகத்துக்கு வரப்போவதில்லை என்று பதிலளித்திருக்கிறார்.

அதற்கு அந்த அதிகாரி, ஜனாதிபதி இந்தத் திட்டங்களுக்காக தனி அலுவலகம் ஒன்றைத் திறந்திருப்பதாகவும், அங்கே வந்து கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

அதற்கும் பலத்த கோபமடைந்த அவர், 'இல்லை, நான் அங்கு வரமாட்டேன். வேண்டுமானால் என் இடத்துக்கு வரச் சொல்லுங்கள். தேவையான அறிவுரைகளை தருகிறேன்...', என்று பதிலளித்திருக்கிறார் சந்திரிகா.

சந்திரிகாவின் நிலைப்பாடு தொடர்பில் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடந்து, சந்திரிகாவை கையாள்வதற்கான சிறப்பு பிரதிநிதி ஒருவரை நியமிக்க முடிவெடுக்கப்பட்டதோடு சுரேன் படகோடாவை நியமிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தத் தகவல் சந்திகாவுக்கு தெரிவிக்கப்பட, அவர் மேலும் கோபமடைந்ததோடு சுரேன் படகோடாவை என்னிடம் அனுப்பக்கூடாது, அவர் என்னுடன் இணைந்து வேலை செய்ய மாட்டார் என்று தெரிவித்துள்ளார்.

அந்தத் தகவலும் மேலிடத்துக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, மீண்டும் சந்திரிகாவை கையாள்வதற்கு வேறு ஒரு மூத்த செயலாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுபற்றி தெரிவித்தபோது, சந்திரிகா அவரை ஏற்றுக்கொள்ள சம்மதித்தார். இதன்படி சந்திரிகாவுக்கும் அந்தக் குழுவின் உறுப்பினர்களுக்கும் இடையில் முதலாவது கலந்துரையாடலை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த கலந்துரையாடல் இடம்பெற்று சில நாட்களின் பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்று கிடைத்தது. உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான தேசிய கூட்டுப் பொறிமுறையின் மூத்த ஆலோசகராக அவர் நியமிக்கப்பட்டுள்ளாரென அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஊடகங்களுக்கும் செய்தி கொடுக்கப்பட்டதைக் கண்டு மீண்டும் கோபமடைந்த சந்திரிகா, உடனடியாக பதில் கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுத்தார். உரிய பதவியை ஏற்கத் தயாரில்லை என்றார். தான் இந்தத் திட்டத்தில் இணையவில்லை என்றும், எந்த ஒரு வெகுமதி அல்லது பதவியை எதிர்பார்த்து ஆலோசனை வழங்க சம்மதிக்கவில்லை என்றும், எனவே தான் இந்த பதவியை ஏற்க மறுப்பதாகவும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், சந்திரிகா முதலில் அந்தப் பதவியைப் பொறுப்பேற்க தயாராகவே இருந்தார் என்றும் ஆனால், அண்மைக் காலமாக ரணிலுக்கும் ஆளும் கட்சிக்கும இடையே நடக்கும் கயிறிழுப்புக்களால் அரசுக்குள் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாலேயே அவர் அந்த முடிவை எடுத்திருக்கிறார் என்கிறார் ஒரு தெற்கின் மூத்த ஊடகர்.!

- ஊர்க்குருவி

## முச்சக்கர வண்டி கூலியாக 2000 ரூபாயை பெண்ணிடம் மிரட்டி பறித்தவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், ஒக். 19

ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு 2 ஆயிரம் ரூபாயை முச்சக்கரவண்டி கட்டணமாக மிரட்டி இளம் பெண்ணிடம் பறித்தவரிடமிருந்து யாழ். நகரில் நின்ற முச்சக்கர வண்டி சாரதிகள் நியாயம் கிடைக்க செய்தனர்.

நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் நகர வைரவர் கோயில் அருகே இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருபவை வருமாறு,

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்துக்கு அண்மையிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்கு வருவதற்காக இளம் பெண் வீதியால் சென்ற முச்சக்கர வண்டியை மறித்து ஏறியுள்ளார்.

ஏறும்போது, யாழ். நகருக்கு செல்ல எவ்வளவு ரூபாய் என்று இளம் பெண் கேட்டபோது, பார்த்து எடுக்கலாம் என்று அந்த சாரதி கூறியுள்ளார். யாழ். நகரை அடைந்ததும் கூலியாக 2 ஆயிரம் ரூபாய் தருமாறு கூறியுள்ளார்.

ஆனால், அந்தப் பெண் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், ஏன் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு இவ்வளவு கூலி எனவும் கேட்டுள்ளார்.

அதற்கு பதிலளிக்காத அந்த முச்சக்கரவண்டி ஓட்டுநர் 2 ஆயிரம் ரூபாய் தருமாறு மிரட்டியுள்ளார்.

அச்சமடைந்த அந்தப் பெண் தன்னிடம் இருந்த 1,500 ரூபாயை கொடுத்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் அந்தப் பெண் அழுதவாறு வைரவர் கோயிலடியில் நின்ற முச்சக்கர வண்டி சாரதிகளிடம் தெரிவித்துள்ளார்.

அந்தப் பெண் ஏமாற்றபட்டதை உணர்ந்த அங்கு நின்ற முச்சக்கர வண்டி சாரதிகள், துரிதமாக செயல்பட்டு பெண்ணிடம் மிரட்டி பணம் பறித்த ஓட்டோவை கண்டுபிடித்து அவரிடம் விளக்கம் கேட்டனர். இதை ஏற்க மறுத்த அந்த ஓட்டோ சாரதி நன்கு கவனிக்கப்பட்ட நிலையில் தனது தவறை ஏற்றுக் கொண்டார்.

இதையடுத்து ஏமாற்றி கூலியாகப் பறித்த பணத்தைப் பெற்ற வைரவர் கோயிலடி முச்சக்கரவண்டி சாரதிகள் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் பணத்தை ஒப்படைத்தனர்.

இதேசமயம், இந்த ஏமாற்று வேளையில் ஈடுபட்ட முச்சக்கர வண்டி சாரதி தரிப்பிட அனுமதி பெறாதது என்றும், இவ்வாறானவர்களின் சேவையை தவிர்க்குமாறும் வைரவர் கோயிலடி ஓட்டோ சாரதிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ஐ-03)

## நீச்சல் தடாகத்துக்குள் வெளிநாட்டவரின் சடலம்

கொழும்பு, ஒக். 19

வாதுவை பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் கொரிய பிரஜை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வாதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வெளிநாட்டு பிரஜை நேற்றுமுன்தினம் மாலை ஹோட்டலுக்கு வந்துள்ளார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் நீச்சல் தடாகத்தில் வெளிநாட்டவர் ஒருவர் மிதப்பதை ஹோட்டல் ஊழியர் ஒருவர் பார்த்து நிர்வாகத்துக்கு தகவல் கொடுத்துள்ளார்.

பின்னர் அவர்கள் வழங்கிய தகவலின் பேரில் வாதுவ பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்றனர்.

தென் கொரிய பிரஜையான 43 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என தெரிய வந்துள்ளது. (அ)



## ஷெஹான் கருணாதிலகவுக்கு புக்கர் விருது வழங்கப்பட்டது!

கொழும்பு, ஒக். 19

2022 ஆம் ஆண்டிற்கான 'புக்கர்' விருது இலங்கை எழுத்தாளர் ஷெஹான் கருணாதிலகவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவர் எழுதிய "The Seven Moons of Maali Almeida" என்ற புத்தகத்திற்காக இந்த விருதை வென்றுள்ளார். இலங்கையில் நடந்த உள் நாட்டுப் போர் குறித்து எழுதப்பட்ட படைப்புக்கு இவ்விருது வழங்கப்பட்டது சிறப்பம்சமாகும். (அ)

## புதிய உறுப்பினர் நியமனம்!

மானிப்பாய், ஒக். 19

வலி. மேற்கு பிரதேச சபையின் புதிய உறுப்பினராக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஆறுமுகம் சிவகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

சங்கானை கிழக்கு 10 வட்டாரத்தை பிரதிநிதித்துவப்படுத்திய தம்பிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் பதவி விலகியமையை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே அவருடன் இணைந்து கடந்த உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்ட சிவகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-05)

## சிவபூமி நிலையம் திறப்பு விழா!

கொழும்பு, ஒக். 19

சிவபூமி நிலையத்தின் கொழும்பு பணிமனை தறிப்பு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இலக்கம் 34, ஹக் வீதி, பம்பலப்பிட்டி என்ற முகவரியில் அமைந்துள்ள புதிய பணிமனைக் கட்டடத்தை திருமதி திரவியம் சபாரடணம் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சகல கமநல சேவை நிலையங்களுக்கும் தேவையான முதற்கட்ட உரம் விநியோகம்

கொழும்பு, ஒக். 19

முதல் சுற்று பருவத்திற்கு தேவையான உரங்கள் அனைத்து விவசாய சேவை நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட 65,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தில் மேலும் 34,000 மெற்றிக் தொன் யூரியா எஞ்சியுள்ளதாகவும், அவை உயர் பருவத்தில் நெற்பயிர்ச் செய்கையின் முதல் சுற்றுக்காக விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த ஆண்டு சோளப் பயிர்களுக்கு யூரியா உரம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(அ)

Eelanadu ஈழநாடு
19.10.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 02

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மிலிந்த மொறகொட யாருடைய நிகழ்ச்சி நிரலில்?

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட 13ஆவது திருத்தச் சட்டத்துக்குப் பதிலாக புதிய ஒப்பந்தம் தேவையென்று தெரிவித்திருக்கின்றார். 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான ஒரு கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது புதிய ஒப்பந்தத்தின் அவசியம் தொடர்பில் குறிப்பிட்டிருக்கின்றார். 13ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற நிலையில் அதனை அமுல்படுத்துவதில் அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இதற்கு பதிலளிக்க முடியாத மிலிந்த மொறகொட புதிய ஒப்பந்தம் தொடர்பில் பேசியிருக்கின்றார்.

கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்திலிருந்து வெளியேறியிருந்தாலும்கூட அவரால் நியமிக்கப்பட்ட இராஜதந்திரிகள் இன்னும் விலக்கிக் கொள்ளப்படவில்லை. மிலிந்த மொறகொடவை நியமிப்பதில் கட்சிக்குள் மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்த போதிலும்கூட மொறகொடவை அமைச்சரவை அந்தஸ்துள்ள தூதுவராக நியமிக்க வேண்டுமென்பதில் கோட்டாபய உறுதியாக இருந்தார். இதன் காரணமாகவே மொறகொடவின் நியமனம் தாமதமானது. மிலிந்த மொறகொடவை நியமிக்க வேண்டுமென்பதில் கோட்டாபய ஏன் இந்தளவு அக்கறை எடுத்துக் கொண்டார்?

மிலிந்த மொறகொட அடிப்படையில் ஒரு தாராளவாதியாக அரசியலுக்குள் பிரவேசித்த ஒருவர். மொறகொடவை எவருமே ஓர் இனவாதியென்று கூறமாட்டார்கள். அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதியான மொறகொட பின்னர் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொண்டார். எப்போது மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொண்டாரோ அப்போதே அவரின் தாராளவாத முகம் மாறிவிட்டது. தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் சிந்தனைக் கூடமொன்றை நடத்திக் கொண்டிருந்த மொறகொட 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டுமென்னும் சுலோகத்துடன் மீளவும் அரசியலில் பிரவேசித்தார்.

இந்தப் பின்புலத்திலேயே கோட்டாபயவின் கவனத்துக்கு உரியவரானார். கோட்டாபய ராஜபக்ஷ அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும், இந்தியாவின் ஆசீர்வாதமின்றி அதனை நீக்குவது இயலாத காரியமென்பதை அவர் அறிந்திருந்தார். இதனை கருத்தில் கொண்டே 13ஆவது திருத்தச் சட்டம் இலங்கைக்கு பொருத்தமானதல்ல என்னும் நிலைப்பாட்டை முன்வைத்த மொறகொடவை இந்தியாவுக்கான தூதுவராக நியமித்தார். ஆனால், மொறகொடவோ தூதுவராக கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அது தனிப்பட்ட கருத்து என்றவாறு இந்திய ஊடமொன்றுக்கு பதிலளித்திருந்தார் - ஆனாலும், வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அதனை அவ்வப்போது மொறகொட வெளிப்படுத்தி வருகின்றார். இப்போது புதிய ஒப்பந்தம் தொடர்பில் பேசியிருக்கின்றார்.

இவ்வாறான கருத்துக்களை அவர், ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பெயரில் முன்வைக்கின்றாரா அல்லது சிங்கள கடும் போக்குவாதிகளின் தேவைகளுக்கு ஏற்ப பேசுகின்றாரா?

கடந்த பதின்மூன்று வருடங்களாக நல்லிணக்கம் தொடர்பில் பேசப்பட்டு வருகின்றது. ஆனால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த நிலையில் ஆகக்குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அதிலிருந்து முன் னோக்கி செல்லும் யோசனையைக்கூட கொழும்பு இதுவரையில் பரிசீலிக்க வில்லை. 13ஆவது திருத்தச்சட்டமே பிரச்னை என்றால் அதற்கு அப்பால் சிங்கள ஆட்சியாளர்கள் செல்வார்கள் என்று எந்த அடிப்படையில் நம்ப முடியும்?

உண்மையில் ஒரு குறிப்பிட்ட தமிழ்த் தேசிய தரப்பினர் 13ஆவது திருத்தத்தின் போதாமை தொடர்பில் பேசுகின்றனர். அதில் உண்மையுண்டு. ஆனால், 13ஆவது திருத்தமே, சிக்கலானதென்று கூறுபவர்களை நம்பி அதனை எவ்வாறு நீக்க அனுமதிக்கலாம்? சிங்கள கடும்போக்குவாதிகளின் விருப்பத்தை எப்படியாவது நிவர்த்திசெய்து மீளவும் அரசியலில் கோலோச்ச வேண்டுமென்று மொறகொட பாடுபடுகின்றார். ஆனால், இவ்வாறான கருத்துக்களை அவரின் தனிப்பட்ட கருத்தாக மற்றவர்கள் கூறினாலும்கூட மொறகொட இந்தியாவுக்கான தூதுவராக இருந்து கொண்டே இவ்வாறான கருத்துக்களை முன்வைக்கின்றார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்குப் பதிலாக புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்வதாயின் அதற்கான சூழல் இருக்கின்றதா? அந்த ஒப்பந்தம் 13ஆவதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்து இன்னும் அதனை பலப்படுத்துமாக இருந்தால் பிரச்னையில்லை. ஆனால், 13ஆவது திருத்தமே பிரச்னை என்பவர்கள் எவ்வாறு அதனை தாண்டிச் செல்வார்கள்?

# மூன்று ஆய்வு நூல்களின் வெளியீட்டு விழா இன்று!

*யாழ்ப்பாணம், ஒக். 19*

*யாழ்ப்பாண பல்கலைக் கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆலயங்கள் தொடர்பில் எழுதிய தமிழ் - ஆங்கில ஆய்வு நூல்களின் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.*

*யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் காலை 9.30 மணிக்கு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறையை சேர்ந்த முன்னாள் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா, வரலாற்றுத் துறையை சேர்ந்த முன்னாள் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம், யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி ஆகியோர் கருத்துரைகளை ஆற்றுவர். (ஐ)*

# பரஞ்சோதி வித்தி. மாணவர்களுக்கு கற்றல் உபரகணங்கள் அன்பளிப்பு!



*யாழ்ப்பாணம், ஒக். 19*

*யாழ்ப்பாணம் எஸ். ரி. எஸ். மருத்துவமனை நிறுவனத்தினர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவர்களுக்கு நேற்று ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை வழங்கினர்.*

*அங்கு கல்வி பயிலும் 81 மாணவர்களுக்கு இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொன்றும் சுமார் 2000 ரூபாய் பெறுமதியானவை.*

*நல்லூர் பிரதேச செயலகத்தால் அடையாளப்படுத்தப்பட்டு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்காக இப்பாடசாலை தேர்வு செய்யப்பட்டிருந்தது. இதில், எஸ். ரி. எஸ் மருத்துவமனை நிறுவன பணிப்பாளர், ஊழியர்கள் மற்றும் நல்லூர் பிரதேச செயலகத்தின் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-3)*

# நிமலராஜன் நினைவேந்தல்!

*மட்டக்களப்பு, ஒக். 19*

*படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் 22ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட நினைவுத்தூபியில் நடைபெறவுள்ளது.*

*மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா. கிருஷ்ணகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)*

# சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்!

*யாழ்ப்பாணம், ஒக். 19*

*யாழ்ப்பாணம் - மருதடி முதியோர் சங்கம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் தெற்கு கற்பகப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

*மருதடி முதியோர் சங்கத் தலைவர் க. கணபதி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்ப்பாண பிரதேச செயலர் சா. சுதர்சன் பிரதம விருந்தினராகவும், திருமதி மரீற்றா ஜெயக் குமார் - மருதடி கிராம உத்தியோகத்தர், திருமதி பிரசாத் சங்கீதா முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், திருமதி தாவீது லக்சன் நீதிராசா யாழ். பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், நா. சுந்தரராஜன் யாழ். பிரதேச முதியோர் சங்க தலைவர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)*

# நீரில் மூழ்கி இரு சிறார்கள் பலி!

*கொழும்பு, ஒக். 19*

*நவகமுவ-அக்பார்வத்தை-கொரதோட்டை பகுதியில் நீராட சென்ற சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.*


*இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.*

*மழையுடனான வானிலை காரணமாக பாரிய கற்குழியொன்றில் நிரம்பியிருந்த மழை நீரில் நீராடிய போதே சிறுவர்கள் இருவரும் இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.*

*14 மற்றும் 15 வயதுடைய சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.*

*சிறுவர்களின் சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

முன்னோரை வழிபட நன்மை நடக்கும். உங்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். குடும்பத்தில் ஒருவரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். வேலை பார்க்கும் இடத்தில் செல்வாக்கு உயரும்.

**இடபம்**

நேற்றைய முயற்சி இன்று நிறைவேறும். முயற்சியில் இருந்து வந்த தடை விலகும். வி.ஐ.பிகள் உங்களுக்கு ஆதரவு புரிவார்கள்.கொடுக்கல் வாங்கல் சீராகும். யோசித்து செயல்பட்டுவீர்கள்.

**மிதுனம்**

குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் விலகும். சுபநிகழ்ச்சி செய்தி தானாக வந்து சேரும். பொருளாதார நிலை உயரும். பணத்தைக் கையாளுவதில் கவனம் தேவை. செலவிற்கேற்ற வரவு உண்டு.

**கடகம்**

அமைதியாக செயல்படுங்கள்.இன்று ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்ய வேண்டிய நிலை ஏற்படும். செயல்களில் அலைச்சல் அதிகரிக்கும் தடுமாற்றம் உண்டாகும்.

**சிம்மம்**

திடீர் செலவுகளால் நெருக்கடி ஏற்படும். வர வேண்டிய பணம் இழுபறி உண்டாகும். பொறுமை அவசியம். குடும்பத்தில் சில பிரச்னை தோன்றி மறையும். பொருளாதார நெருக்கடி ஏற்படும்.

**கன்னி**

எதிர்பார்த்த வரவு வீடு வந்து சேரும்.நெருக்கடிகளில் இருந்து விடுபடுவீர்கள். குடும்ப பொருளாதார நிலை உயரும்.குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர். வியாபாரத்தில் புதிய முயற்சி மேற்கொள்வீர்கள்.

**துலாம்**

முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.தொழிலில் இருந்து வந்த தடை விலகும். பிறரை அனுசரித்துச் செல்வது நன்மை. பொது இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். நிதி நிலை சீராகும்.

**விருச்சிகம்**

மனதில் குழப்பம் தோன்றி மறையும். ஆவலுடன் எதிர்பார்த்த ஒன்று இழுபறியாகும். வீண் அலைச்சலும் செலவும் உண்டாகும். பயணத்தில் கவனம் தேவை. பண விஷயத்தில் எச்சரிக்கை அவசியம்.

**தனுசு**

அலைச்சல் அதிகரிக்கும், எதிர்பார்ப்பில் தடை தோன்றும். விரோதிகளால் சில சங்கடங்களை சந்திப்பீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு தடை உண்டு. அலைச்சலும் செலவும் அதிகரிக்கும்.

**மகரம்**

குடும்பத்தினர் ஒத்துழைப்புடன் ஒரு செயலில் வெற்றி அடைவீர்கள்.நண்பர்கள் வழியே நன்மை அதிகரிக்கும். உங்கள் விருப்பம் நிறைவேறும்.எதிர்பார்த்த செய்தி வீடு வந்து சேரும்.

**கும்பம்**

எதிர்ப்புகள் விலகும். துணிச்சலுடன் செயல்பட்டு எண்ணியதை அடைவீர்கள்.விழிப்புணர்வுடன் செயல்படுவீர்கள். நினைத்ததை சாதிப்பீர்கள். விருப்பம் நிறைவேறும். எதிர்பாராத வரவு வந்து சேரும்.

**மீனம்**

குடும்ப குழந்தைகளின் நன்மைக்காக எதிர்கால திட்டம் ஒன்றை மேற்கொள்வீர்கள். பிள்ளைகள் நலன் அக்கறை காட்டுவீர்கள். சேமிப்பில் கவனம் செல்லும். உறவினர்களுடன் ஏற்பட்ட பிரச்னை விலகும்.

### ஜெயலலிதா மரணம்:

# சசிகலா உட்பட நால்வர் குற்றவாளிகளாக முடிவு

## ஆறுமுகசாமி ஆணையம் அறிக்கை

*சென்னை, ஒக். 19*

*முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவில், சசிகலா உள்ளிட்ட 4 பேரை குற்றம் செய்தவர்களாக முடிவு செய்து, இவர்கள் மீதான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று ஆறுமுகசாமி விசாரணை ஆணைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான விசாரணை ஆணையத்தின் அறிக்கை தமிழக சட்டப்பேரவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.*

*இந்த அறிக்கையின் பரிந்துரைகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள்:*

*2016 செப்ரெம்பர் 22ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட மூன்று நாட்களுக்கு முன்பாகவே ஜெயலலிதாவுக்கு அதிக காய்ச்சல் இருந்துள்ளது. மருத்துவர் சிவகுமார் பரிந்துரையின்படி பரசிற்றமோல் எடுத்துள்ளார். போயஸ் கார்டனில் மயங்கி விழுந்த ஜெயலலிதாவை தாங்கிப் பிடித்த சசிகலாவும், பணியாளர்களும் தாமதிக்காமல் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். சுயநினைவின்றி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். ஜெயலலிதாவுக்கு கட்டுப்பாடற்ற நீரழிவு நோய், மாறுபட்ட இரத்த அழுத்தம், தைரொய்ட், உடல் பருமன், எரிச்சல் கொண்ட குடல் நோய்குறி போன்ற உபாதைகள் இருந்துள்ளன.*

*2016 செப்ரெம்பர் 27-ஆம் திகதி இரவே ஜெயலலிதாவுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. 2016 ஒக்ரோபர் 11ஆம் திகதி அமெரிக்க மருத்துவர் ஸ்டூவார்ட் ரஸ்ஸலால் பரிந்துரைக்கப்பட்ட ஆஞ்சியோ சிகிச்சை ஜெயலலிதாவுக்கு செய்யப்படவில்லை.*

*ஆஞ்சியோவை ஒத்திவைக்க லண்டன் மருத்துவர் ரிச்சர்ட் பீகே தொலைபேசியில் பரிந்துரைத்ததாகவும், மருத்துவர் பாபு ஆபிரகாம் முரண்பட்ட தகவலை ஆணையத்தில் பதிவு செய்துள்ளார். இந்த முடிவை மாற்றுவதற்கான உரிமை அமெரிக்க மருத்துவரைத் தவிர, ஆர்.1-ன்னும் (சசிகலா ) பெற்றிருந்தார்.*

*2012இல் மீண்டும் ஜெயலலிதாவுடன் இணைந்ததிலிருந்து அவர்கள் இருவருக்கும் இடையே சுமுக உறவு இல்லை. சசிகலாவைக் குற்றம்சாட்டுவதைத் தவிர வேறு எந்த முடிவுக்கும் வர இயலாது.*

*ஜெயலலிதா இறந்த நேரம் 2016 டிரெம்பர் 5 ஆம் தேதி இரவு 11.30 என மருத்துவமனை அறிவித்தது. ஆனால், அவர் இறந்த நேரம் 2016 டிசெம்பர் 4ஆம் திகதி மதியம் 3 மணி முதல் 3.50-க்குள் இருக்கும். 2016 டிசெம்பர் 4 ஆம் திகதி மதியம் 3 மணி முதல் 3.30 மணிக்குள் ஜெயலலிதாவின் முதலாம் ஆண்டு நினைவை ஜெயலலிதாவின் மருமகன் ஜெ தீபக் அனுசரித்துள்ளார்.*

*வி.கே.சசிகலா, சிவகுமார், முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர், அப்போதைய சுகாதாரத் துறை முதன்மைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் குற்றம் செய்தவர்களாக முடிவு செய்து, அவர்கள் 4 பேரையும் விசாரணைக்கு உட்படுத்த உத்தரவிட வேண்டும். (ஐ)*

# இலங்கை தொடர்பான வெளிவிவகார கொள்கையை அரசு மாற்ற வேண்டும்!

## பாட்டாளி மக்கள் கட்சி

*சென்னை, ஒக். 19*

இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிரான செயல்களுக்கு இலங்கை மண்ணை சீனா பயன்படுத்திக் கொள்ள அனுமதிக் கக்கூடாது என்று இலங்கை அரசை இந்தியா எச்சரிக்க வேண்டும். அதன்பிறகும் இலங்கை அரசு திருந்தா விட்டால், இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இலங்கை தொடர்பான இந்திய வெளியுறவுக் கொள்கையை மத்திய அரசு திருத்தி அமைக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. "இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் சீன இராணுவத்தினர் அதிக எண்ணிக்கையில் முகாமிட்டிருப்பதாகவும். அங்கிருந்து நவீன கருவிகளின் உதவியுடன் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை தீவிரமாக உளவு பார்த்து வருவதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. இந்த விவகாரத்தில் மத்திய அரசு பொறுமை காப்பது தேசப் பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடும்.

இலங்கையில் சீனப் படைகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதையும், இந்தியாவுக்குள் சீனர்கள் ஊடுருவியிருப்பதையும் தமிழக பொலிஸ் உளவுப் பிரிவும் கடலோர பாதுகாப்பு குழுவும் உறுதி செய்திருக்கின்றன. சீனப் படைகளின் தொடர் உளவு, சீனர்களின் ஊடுருவல் ஆகியவற்றின் நோக்கம் என்ன? என்பது அனைவரும் அறிந்ததுதான்.

இந்தியாவுக்கு எதிரான சீனாவின் சதித் திட்டங்களுக்கு இலங்கை அரசு தெரிந்தே உதவி செய்கிறது. ஒருபுறம் இந்தியாவிடம் உதவிகளை வாங்கிக் குவிக்கும் இலங்கை அரசு, இன்னொருபுறம் அதன் விசுவாசத்தை சீனாவுக்கு காட்டிக் கொண்டிருக்கிறது.

இலங்கை வழியாக சீனாவிடமிருந்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை முறியடிப்பது தான் இந்தியாவின் முதன்மை பணியாக இருக்க வேண்டும். அதற்காக தென்னிந் தியாவின் கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பையும், கண்காணிப்பையும் வலுப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# ஹிந்தியை திணிக்கவே ஆட்சியேறியது பா.ஜ.க.

## முதல்வர் ஸ்டாலின்

அமித் ஷா குழுவின் பரிந்துரைகள், ஹிந்தி பேசாத மாநில மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆட்சிக்கு வந்ததன் நோக்கமே ஹிந்தி திணிப்புதான் என்று பாஜக நினைக்கிறது - இவ்வாறு சட்டபேரவையில் நேற்று உரையாற்றினார் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின்

மேலும், "இந்திய ஒன்றியத்தில் ஹிந்தி மொழியைத் திணிப்பதை ஒன்றிய அரசு தனது வழக்கமாகக் கொண்டுள்ளது. தமிழினத்தைத் தமிழர் பண்பாட்டைக் காக்கும் போராட்டமாகத் தொடர்ந்து கொண்டு இருக்கிறோம்.

அமித் ஷா குழுவின் பரிந்துரைகள், ஹிந்தி பேசாத மாநில மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆட்சிக்கு வந்ததன் நோக்கமே ஹிந்தி திணிப்புதான் என்று பா. ஜ. க. நினைக்கிறது. ஒரே நாடு ஒரே மொழி என்ற பெயரில் பிற தேசிய மொழிகளை அழிக்க முயற்சி செய்கிறது பா. ஜ. க. அரசு.

ஆங்கிலத்தை மொத்தமாக அகற்ற பா. ஜ. க. அரசு முயற்சி செய்கிறது. மேலாதிக்கம் செலுத்தும் மொழியாக ஹிந்தியை மாற்றிக்கொண்டிருக்கின்றனர். ஆங்கிலத்தை அகற்றுவதற்கு பின்னால் ஹிந்தியை அமர வைக்கும் எண்ணம் தான் உள்ளது" - என்றார்.

# இரண்டாக உடைகின்றதா தமிழ் முற்போக்கு கூட்டணி?

கொழும்பு, ஒக். 19

தமிழ் முற்போக்கு கூட்டணி இரண்டாக பிளவுபடும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாக கூட்டணியில் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்ஒர் அங்கமாக கூட்டணியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து சந்திரா சாப்டர் விலகவுள்ளார் எனவும், விரைவில் இது தொடர்பில் அறிவிப்பு வெளியாகலாம் எனவும் தெரிய வருகின்றது.

முற்போக்கு கூட்டணியின் தலைமைப்பீடத்தின் தன்னிச்சையான செயற்பாடு காரணமாகவே செயலாளர் இந்த முடிவை எடுக்கவுள்ளார் என உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# யாழில் வேலை வாய்ப்புக்காக 19,000 இளையோர் காத்திருப்பு!

## அரச அதிபர் மகேசன் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 19

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 19,147 இற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் தொழில் தேடுபவர்களாக யாழ்.மாவட்ட செயலக மனித வலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தில் பதிவை மேற்கொண்டுள்ளனர் என யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்டத்தில் வேலையில்லா பிரச்னையானது தேசிய மட்ட வேலையில்லா பிரச்னைகளை பார்க்கி



லும் அதிக உயர்வாக காணப்படுகின்றது.

21 வீதமானவர்கள் வடக்கு மாகாணத்தில் வேலையற்றவர்களாக உள்ளதாக மத்திய வங்கியின் வருடாந்த தகவல் தெரிவிக்கின்றன.

யாழில் கடந்த வருடம் 7.5 வீதமாக காணப்பட்ட வேலையற்றோர் வீதம் தேசிய மட்டத்தில் 4.5 வீதமாக காணப்பட்டது. எனினும் கடந்த வருடத்தை விட இந்த வருடம் வேலையற்றோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது-என்றார். (அ)

# அத்தியாவசிய சேவை விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## எரிசக்தி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 19

அத்தியாவசிய சேவை விதிமுறைகளை மீறும் எந்தவொரு ஊழியர் அல்லது தொழிற்சங்கத்துக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய சேவைகள் ஆறு மாதங்களுக்கு முன்பே அத்தியாவசியமானதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் முழுமையான தடயவியல் தணிக்கைக்கு எதிராக பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க பல பெற்றோலிய தொழிற் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

எனவே, சேவையில் ஏற்படும் இடையூறுகளுக்கு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்திய அமைச்சர், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளார். (அ)

# பாடசாலை நேரத்தில் மாணவர்களுக்கு தியேட்டரில் 'பொன்னியின் செல்வன்'!

## வடமாகாண கல்வி அமைச்சின் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 19

முல்லைத்தீவு வலயப் பாடசாலை மாணவர்களைத் தனியார் கல்வி நிறுவனம் ஒன்று யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டருக்குப் 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தைப் பார்ப்பதற்கு அழைத்துச் சென்ற சம்பவம் தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

வார இறுதி நாள்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனச் செயற்பாட்டுக்கு இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காகவே, இவ்வாறு பாடசாலை நாளில் மாணவர்களைத் தியேட்டருக்கு அழைத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு வலயத்தில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ்வாறு படம் பார்க்க அழைத்துச் செல்லப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது.

பெற்றோரின் சம்மதத்துடனேயே மாணவர்கள் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும் கூறப்படுகின்றது.

ஆயினும் பாடசாலை நேரத்தில் இவ்வாறு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டமையால் வடக்கு மாகாண கல்வி அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது எனக் கூறப்பட்டது.

இதற்காக மாணவர் ஒருவரிடமிருந்து 1,500 ரூபா பணம் அறவிடப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது. (அ)

# கோப் குழுவில் இருந்து விலகிய சாணக்கியன்

## சிறிதரன் இடம்பிடித்தார்

கொழும்பு, ஒக். 19

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிலிருந்து (கோபா) பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராசமாணிக்கம் விலகியுள்ளார்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்புவேளையின்போதே பிரதிச் சபாநாயகரால் மேற்படி தகவல் வெளியிடப்பட்டது.

அவரது வெற்றிடத்துக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# நீர் கட்டணங்கள் உயரும்?

கொழும்பு, ஒக். 19

புதிய நீர் இணைப்புகளுக்காக அறவிடப்படும் கட்டணத்தை அதிகரிக்க நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தீர்மானித்துள்ளது.

நிலவும் மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் அவற்றின் அதிகரிப்பு என்பவற்றை கருத்திற் கொண்டு இந்த கட்டண உயர்வு மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது, புதிய நீர் இணைப்பை பெற்றுக் கொடுப்பதற்கான 17042.50 ரூபா கட்டணம் 24500 ரூபாவாகவும் சமுர்த்திக்கான நீர் இணைப்புகளை பெற்றுள்ளதாக 5300ரூபாவாக காணப்பட கட்டணம் 6300 ரூபாவாகவும் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், புதிய அதிகரிப்பு தொடர்பிலான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# ஓட்டோக்களுக்கு எரிபொருளின் அளவை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 19

ஓட்டோ செலுத்தும் சுய தொழிலாளர்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு இரு வாரங்களுக்குள் அதிகரிக்கப்படும் என எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

சுய தொழிலில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்த பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இந்த நடவடிக்கையில் தாமதம் ஏற்படுவதற்கான காரணம் குறித்து பாராளுமன்றில் நேற்று கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளிக்கும் போதே, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள தரவுகளுக்கமைய தொழிலில் ஈடுபடும் ஓட்டோக்கள் தொடர்பான தகவல்கள் உள்ளன. அதற்கமைய, தற்போது ஓட்டோ செலுத்தும் சுய தொழிலாளர்கள் சுமார் 3 இலட்சம் பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னரும் வாடகை ஓட்டோக்களை உரிய பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கிடைக்கப்பெற்ற தகவல்களை சரிபார்த்து ஒதுக்கீட்டை அதிகரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள குறைந்தது இருவாரங்களாவது தேவைப்படும். தற்போது, வாடகை ஓட்டோக்கள் தொடர்பான தரவுகளை கியூ. ஆரில் உள்ளீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இது நிறைவடைந்த பின்னர் அவர்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க முடியும்.

மூன்று கட்டங்களில் மொத்தமாக 100 ரூபாவினை பெற்றோல் விலை குறைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதி பலனை பொதுமக்களுக்கு முச்சக்கர வண்டி சாரதிகள் வழங்க வேண்டும் - என்றார். (அ)

# நுகேகொடையில் மூன்று பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!

கொழும்பு, ஒக். 19

நுகேகொட பகுதியில் நேற்றுக் காலை 03 பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

நேற்று காலை 6 மணியளவில் கோட்டையில் இருந்து பயணித்த 138 இலக்க தனியார் பஸ் வீதி சமிக்ஞை விளக்குகளை அலட்சியப்படுத்தி விட்டு பயணித்ததன் காரணமாக மேலும் இரு பஸ்களுடன் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பஸ் சாரதி ஒருவர் காயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய தனியார் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பாராளுமன்றத்தை கலைக்கமாட்டேன்!

## உறுதிபடக் கூறினார் ரணில்

கொழும்பு,ஒக்.19

**பாராளுமன்றத்தை கலைக்கப்போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தின்ம திங்கட்கிழமை இடம்பெற்ற ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் குறித்து அவர் தெரிவித்துள்ளார்.

20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் பாராளுமன்றம் கலைக்கப்படும் காலத்தை இரண்டரை வருடங்களாக குறைத்துள்ளதாக பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் இதன்போது தெரிவித்தனர்.

எனினும் அரசியலமைப்பின் 19ஆம் திருத்தச்சட்டத்தின் மூலம் அதனை நான்கரை வருடங்களாக அதிகரித்ததாகவும் அது குறித்து 22ஆம் திருத்தச்சட்டத்தில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வினவியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தைக் கலைப்பதாக இருந்தால், அதை நானே செய்ய வேண்டும் என்றும் அதற்கான எந்த ஆயத்தமும் தற்போது இல்லை என்றும் குறிப்பிட்டார்.

22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் வெளிநாடுகளின் ஆதரவைப் பெறும் வகையில் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டு மென நீதி அமைச்சர் கலா நிதி விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் வெளிவிவ கார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஆகியோர் தெரிவித்தனர்.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அவசியம் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதா என பாராளுமன்ற உறுப் பினர் வஜிர அபேகுணவர்தன வினவியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பாக மேலதிக கலந்துரையாடலில் ஈடுபடவேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கு அறிவித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ஜனாதிபதியை அவசரமாக சந்தித்த மகிந்த ராஜபக்ஷ!



கொழும்பு, ஒக். 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் அவசர சந்திப்பொன்று இடம்பெற்றதாக நம்பகமான தகவல்கள் தெரிவித்தன.

இந்த கலந்துரையாடல் நேற்று முன் தினம் மாலை 5 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கலந்து ரையாடலின் போது தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து ஜனாதிபதியுடன் மகிந்த நீண்ட நேரம் கலந்துரையாடியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே பஸில் ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே தொலைபேசி வாயிலாக கலந்துரையாடலொன்று இடம்பெற்றிருந்த நிலையில், தற்போது மகிந்த ஜனாதிபதியை சந்தித்துள்ளமையானது கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தாமரைக் கோபுரத்தின் திறக்கும் நேரம் மாற்றம்

கொழும்பு, ஒக். 19

தாமரை கோபுரம் திறக்கப்படும் நேரத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 09.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை அனுமதிச்சீட்டு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நாட்களில் காலை 09.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை தாமரைக் கோபுரத்தை பார்வையிட முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 09.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை அனுமதிச்சீட்டுகள் வழங்கப்படவுள்ளதுடன், இரவு 11.00 மணி வரை பார்வையிட முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பிரியமாலியிடம் வைப்பிலிட்டோர் மீதும் வழக்கு தாக்கல் செய்வதற்கு தீர்மானம்

கொழும்பு, ஒக். 19

நிதி மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி மற்றும் அவரிடம் பணத்தை வைப்பிலிட்டவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதுவரை கிடைத்த தகவலின்படி, அவர் ஏமாற்றிய தொகை 300 முதல் 500 கோடி ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

அரசியல்வாதிகள், நடிகர்கள் மற்றும் நடிகைகள், பலம் வாய்ந்த வர்த்தகர்கள், மதத் தலைவர்கள் மற்றும் இரண்டு அல்லது மூன்று மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் திலினியின் வாடிக்கையாளர்கள் பட்டியலில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திலினி பிரியமாலி, பாதுகாப்புப் படைத் தலைவர் ஒருவருக்கு கலாநிதி பட்டம் பெறுவதற்கு ஆதரவளித்துள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

தற்போது திலினி பிரியாமாலியிடம் வைப்பிலிட்டவர்கள் மற்றும் அவருக்கு ஆதரவாக செயல்பட்டவர்களை பொலிஸார் அடையாளம் கண்டு வருகின்றனர்.

எதிர்வரும் நாட்களில் மேலும் சந்தேகத்திற்கிடமான நபர்களை விசாரிக்கவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிக்கும் சீனக் கப்பல்!

கொழும்பு, ஒக். 19

சீனக் கப்பலொன்று இன்று புதன்கிழமை அல்லது நாளை வியாழக்கிழமை இலங்கைக் கடலுக்கு வரவுள்ளதாக கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் தீப்பிடித்து மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் இடிபாடுகளை மீட்பதற்காக இந்தக் கப்பல் நாட்டிற்கு வரவுள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

இடிபாடுகள் அகற்றப்படும் வரை இந்தக் கப்பல் இலங்கைப் பெருங்கடலில் பல மாதங்கள் இருக்கும் என்றும் அதன் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார்.

இதேவேளை, கப்பலில் தீப்பற்றியதையடுத்து சிதறிய 1700 மெற்றிக் தொன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு நீர் கொழும்பு, பமுனுகமவிற்கு அருகில் உள்ள கழிவு சேமிப்பு முற்றத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆய்வகங்களில் கழிவுகள் பிரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படும் என்றும் அதன் பின்னர் அதனை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார். (அ)

# கைதிகளுக்குத் தரமற்ற உணவு வழங்கப்படுவது உண்மையல்ல!

## கூறுகின்றார் அமைச்சர் விஜயதாஸ



கொழும்பு, ஒக். 19

சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகளுக்கு தரமற்ற உணவு வழங்கப்படுவதாக வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும்போதே நீதி அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறைச்சாலைகளில் மோசடிகள் இடம்பெறுவதோடு, தரமற்ற உணவு வழங்கப்படுவதாகவும், சிறையிலிருந்து வெளியேறியவர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

உணவு தரம் குறித்து பரிசோதனைகளை மேற்கொள்ளும் தரப்பினரை வெலிக்கடை உள்ளிட்ட சிறைச்சாலைகளுக்கு அனுப்பி பரிசோதனைகளை மேற்கொண்டோம்.

அது மாத்திரமின்றி நுகர்விவகார அதிகார சபை உத்தியோகத்தர்களையும்சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் சென்று பரிசீலிக்குமாறு ஆலோசனை வழங்கியிருந்தேன்.

இரு தரப்பினரும் வழங்கிய அறிக்கையின் பிரகாரம் சிறைக் கைதிகளுக்கு தரமற்ற உணவு வழங்கப்படுவதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என நிரூபிக்கப்பட்டுள்ளது- என்றார். (அ)

# போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்க யாழில் நிலையம்!

## சகல தரப்புடனும் சேர்ந்து அமைக்க நடவடிக்கை மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

**வட பகுதியில் போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பதற்கு யாழ்.நகருக்கு அண்மையில் புனர்வாழ்வு நிலையம் அமைக்க முயற்சி மேற்கொண்டு வருவதாக யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.**

பப்ரல் அமைப்பின் மாற்றத்திற்கான பாதை கற்கைநெறியின் யாழ். மாவட்ட பெண்கள் குழு நடத்தும் போதையினால் பாதை மாறும் இளையோரை நல்வழிப்படுத்தி நற்பிஜைகளாக உருவாக்வோம் எனும் தொனிப் பொருளிலான போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு திருநெல்வேலி முத்து தம்பி இந்து மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.



இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே யாழ்.மாநகர முதல்வர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் பிரதேசமானமானது அச்சுறுத்தலையும் ஆபத்தினையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது.

அண்மையில் வெளிவரும் பத்திரிகைச் செய்திகள் அனைவரையும் கவலைக்கு உள்ளாக்குகின்ற-கலக்கத்தை உண்டாக்குகின்ற பயங்கரமான செய்திகளாக உள்ளன.

ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகள் எவ்வாறு பாதிக்கப்படப் போகின்றார்கள் என்ற அச்சத்தில் வாழ் நாளை கழிக்கும் ஒரு அவல நிலைமை தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

போதைப்பொருள் வர்த்தகர்களின் பிரதான இலக்காக-பாதிக்கப்படுபவராக இருப்பவர்கள் பாடசாலை மாணவர்களாகத்தான் உள்ளனர். பாடசாலை மாணவ மாணவிகளை இலக்கு வைத்து இவ்வாறான போதைப்பொருள் விநியோகம் அண்மை காலங்களில் அதிகரித்துள்ளது.

எதிர்காலச் சந்ததி எனக் கருதப்படும் எங்கள் இளைஞர்கள் யுவதிகளை நோக்கிப் போதைப்பொருள் வர்த்தகம் மிக வேகமாக திருப்பப்பட்டுள்ளது. அதற்குள்ளே அறிந்தும் அறியாமலும் அதன் எதிர்கால விளைவுகள் பற்றி தெரியாமலும் எமது இளைஞர், யுவதிகள் அடிமையாகி கொண்டிருக்கின்றமை இந்த மண்ணிலே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இதனை தடுத்து நிறுத்த வேண்டிய பாரிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. அதிலும் விசேடமாக அரசியல் தலைமைகள், சமூக மட்ட பிரதிநிதிகள், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் கல்விச் சமூகம் அனைவரும் இதில் பங்காற்றவேண்டும்.

எதிர்காலத்தில் போதைப் பொருள் பாவனைக்கு உள்ளாகாதவாறு மாணவர்களை எவ்வாறு பாதுகாப்பது தொடர்பில் நாங்கள் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்.மாநகர முதல்வர் என்ற ரீதியில் எதிர்காலத்தில் எவ்வாறான செயற்பாட்டை முன்னெடுப்பது தொடர்பில் அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து விசேட கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யத் திட்டமிட்டுள்ளேன்.

அத்தோடு போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கக்கூடிய விசேட நிலையம் ஒன்றை யாழ்.நகருக்கு அண்மையில் அமைப்பதற்கு யோசித்து வருகின்றோம். போதைப் பொருளுக்கு அடிமையானவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்புவதன் மூலம் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவதன் மூலம் அவர்களை சமூகத்தோடு ஒருங்கிணைக்க முடியும்.

எனவே வடக்கில் யாழ். நகருக்கு அண்மையில் ஒரு இடத்தில் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அதற்குரிய முயற்சியை ஆரம்பித்துள்ளோம். அனைவரின் ஒத்துழைப்புடன் அந்த விடயம் விரைவில் கைகூடும்-

# வெட்டுக் காயத்துடன் ஒருவர் வல்லிபுரக்குறிச்சியில் மீட்பு!

வடமராட்சி, ஒக். 17

வடமராட்சி - வல்லிபுரக் குறிச்சி பகுதியில் வெட்டுக் காயங்களுடன் நபர் ஒருவர் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது. கடுமையான வெட்டுக்காயங்களுடன் நபர் ஒருவர் காணப்படுவதாக. பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த பொலிஸார் காயங்களுடன் காணப்பட்டவரை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-02)

# யாழ். மாவட்ட செயலகத்தில் 22ஆம் திகதி தொழிற்சந்தை!

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாண மாவட்ட செயலகமும், மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களமும் இணைந்து மாவட்ட செயலகத்தில், எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை தொழிற் சந்தையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது என மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தில் சுமார் 19 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளையோர் தொழில் தேடுபவர்களாக பதிவு செய்துள்ளனர்.

அவர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கும் அத்துடன் தொழிற் சந்தைக்குரிய தங்கள் கற்கை நெறிகளை பயில ஆர்வம் உள்ளவர்க்கு அந்த பயிற்சி நெறியை ஏற்படுத்தும் நோக்கிலும் இந்த தொழில் சந்தை நிகழ்வு நடைபெறுகிறது.

குறிப்பாக தனியார் உற்பத்தி நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் துறை, ஹோட்டல் துறை, கணக்கியல் துறை, காப்புறுதித் துறை, ஆடை தொழிற்சாலைகள், பாதுகாப்பு சேவை, தாதியர் சேவை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கி சுமார் 40ற்கும் மேற்பட்ட தொழிற்துறை நிறுவனங்களும், பயிற்சி நெறி நிறுவனங்களும் பங்கேற்றவுள்ளனர்.

தொழிற்பயிற்சி பாடநெறிக்கான கணனித்துறை, தாதிய பயிற்சிநெறி ஏனைய தொழில் பயிற்சி நிறுவனங்கள் கப்பல் துறை தொழில்வாய்ப்பு மற்றும் அதற்கான தொழிற்பயிற்சி மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தில் பயிற்சிநெறிகள் தொடர்பான நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

தொழில் தேடுபவர்களையும் தொழில் வழங்குநர்களையும் இணைக்கும் மாபெரும் தொழிற்சந்தையாக இது நடத்தப்படவுள்ளது. தொழில் தேடுபவர்களும், தொழில் வழங்குநர்களும் தங்கள் தேவைகளை இந்த மாபெரும் தொழிற் சந்தை மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்-என்றார். (அ)

# ஒக்ரோபர் மாதத்தின் முதல் பாதியில் 20,000 சுற்றுலாப் பயணிகள் வருகை!

கொழும்பு, ஒக். 19

ஒக்ரோபர் மாத முதல் பாதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 20,000 ஐ கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது நாட்டுக்கு வருகை தரும் சர்வதேச பார்வையாளர்களின் விகிதத்தில் முன்னேற்றத்தைக் காட்டுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட தற்காலிகத் தரவுகளின்படி, ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 16ஆம் திகதி வரை இலங்கைக்கு மொத்தமாக 20 ஆயிரத்து 573 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒக்ரோபர் முதல் வாரத்தில் (1-7) இலங்கைக்கு 8 ஆயிரத்து 614 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளதாகவும் இரண்டாவது வாரத்தில் (08-14) முதல் வாரத்தைவிட அதிகமாக 9 ஆயிரத்து 125 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாவது வாரத்தின் முதல் இரண்டு நாட்களில் (15-16) சுற்றுலாப் பயணிகளின் வருகை 2 ஆயிரத்து 834ஆக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒக்ரோபர் மாதத்திற்கான இலங்கை சுற்றுலாவுக்கான மிகப்பெரிய மூலச் சந்தையாக இந்தியா உள்ளதாகவும் மொத்த வருகையில் 20 சதவீதத்தை இந்தியா கொண்டுள்ளதாகவும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கைக்குக் கடன் வழங்கும் நாடுகளுடன் கூட்டமொன்றை நடத்த ஜப்பான் நடவடிக்கை

கொழும்பு, ஒக். 19

இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளுடன் வருட இறுதியில் கூட்டமொன்றை நடத்த ஜப்பான் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் கடன் நெருக்கடியை தீர்க்கும் நம்பிக்கையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கமும் இதில் முனைப்புடன் செயற்பட்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் சந்திப்பில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதில் ஏனைய கடன் வழங்கும் நாடுகளும் பங்கு வகிக்குமாறு ஜப்பான் கோரிக்கை விடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் செலுத்தவேண்டிய கடன் தொகையை குறைப்பது, அதற்கான கால அவகாசம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதம் ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானுக்கு விஜயம் செய்தார்.

இதன்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ஆதரவளிக்குமாறு ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடாவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன. (அ)

# தார்மீக நியாயப்பாட்டை மீண்டும் பெறுதல் இன்றியமையாதது



கலாநிதி ஜெகான் பெரேரா

உலகின் கவனத்தை ஈர்த்தது மாத்திரமல்ல, ஜனாதிபதியை, பிரதமரை, அமைச்சரவையை பதவி விலகவும் வைத்த நான்கு மாத கால மக்கள் கிளர்ச்சியை கண்ட நாடு இலங்கை. இப்போது வெறுமனே ஒரு மூன்று மாதங்கள் கடந்த நிலையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு தோற்றத்துக்கேனும் அமைதியானதாகவும் உறுதிப்பாடு கொண்டதாகவும் இருக்கிறது. அந்த மாற்றத்துக்கான பெருமை (அந்த சொல் பொருத்தமானதாக இருந்தால்) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே உரியதாகும். அறகலய போராட்ட இயக்கத்தின் எழுச்சியின்போது அரசாங்கத்தில் உயர்மட்டங்களில் இருந்தவர்கள் அவருக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டியதற்கு காரணம் இருக்கிறது.

மக்களின் சீற்றத்தைச் சந்திக்கவேண்டி வரும் என்ற பயத்தில் அவர்கள் தங்கள் மறைவிடங்களை விட்டு பல மாதங்களாக வெளியே வரமுடியாமல் இருந்தார்கள். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது மக்கள் இரவோடிரவாக தங்களது வருமானங்களினதும் சேமிப்புகளினதும் பெறுமதியில் அரைவாசியை அல்லது அதற்கும் கூடுதலானதை இழந்தார்கள். மறைந்திருந்த அரசியல்வாதிகள் மீண்டும் அரசாங்க அமைச்சர்களாக பதவிகளில் இருக்கிறார்கள். மீண்டும் அமைச்சர்களாவதற்கு காத்துக் கொண்டிருப்பவர்கள் பொறுமையை இழந்த நிலையில் காணப்படுகிறார்கள் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.

மூன்று மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின் மூலமாக நாட்டின் அதியுயர் பதவிக்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க தெரிவான போது நாட்டில் குழப்பகரமான ஒரு நிலையே காணப்பட்டது. முறைமை மாற்றமொன்றை வேண்டியும் ஜனாதிபதியையும் பிரதமரையும் முழு பாராளுமன்றத்தையும் வீட்டுக்கு போகுமாறு கோரியும் நாடுபூராவும் கிளர்ந்தெழுந்த மக்களினால் வீதிகளும் பொது இடங்களும் நிரம்பி வழிந்தன. தாங்கள் வீட்டுக்கு போகுமாறு கேட்டவர்களுக்கு பதிலாக யார் அந்த இடத்தை நிரப்பவேண்டும் என்று அந்த மக்கள் சொல்லவில்லை. ஜனாதிபதியினதும் பிரதமரினதும் அலுவலகங்களும் வாசஸ்தலங்களும் முற்றுகையிடப்பட்டிருந்தன. போராட்ட இயக்கத்தின் அடுத்த இலக்காக பாராளுமன்றம் இருந்தது.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்று வந்தபோது பொலிசாரும் - பாதுகாப்பு படையினரும் தற்காப்பு நிலையில் இருந்தார்கள். ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் கீழான திடீர் மாற்றமே மக்கள் கிளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் பவியை விட்டு விலகிய முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்சவை புதிய ஜனாதிபதியை பெரிதும் பாராட்டவைத்தது. பிரதமர் பதவியில் இருந்து விலகிய பின்னர் முதற்தடவையாக கடந்தவாரம் ஆளும்கட்சியின் களுத்துறை பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோது ராஜபக்ச அந்த பாராட்டை தெரிவித்தார்.

ஜனாதிபதியாக விக்கிரமசிங்கவின் தெரிவு நிலைவரத்தில் உடனடி மாற்றத்தைக் கொண்டுவந்தது. போராட்டங்களின் விளைவான குழப்பநிலையை இராணுவம் திணித்த ஒழுங்கு பதிலீடு செய்தது. சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்திய பொலிசாரும் பாதுகாப்பு படையினரும் போராட்டக்காரர்கள் மீது வன்முறையைப் பிரயோகித்து அவர்களை கைது செய்தனர். உள்நாட்டு மற்றும் சர்வதேசிய மனித உரிமைகள் அமைப்புக்களிடம் இருந்தும் ஏன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடமிருந்தும் கடுமையான அக்கறைகளும் கண்டனங்களும் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் பாதுகாப்பு படைகள் போராட்டக்காரர்கள் மீது தொடர்ந்தும் வன்முறையை பிரயோகித்து கைது செய்து கொண்டேயிருக்கிறார்கள்.

அந்த அக்கறைகளும் கண்டனங்களும் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தியதாக தெரியவில்லை. ஆர்ப்பாட்டக் களத்துக்கு குழந்தையை கொண்டுவந்த தாயொருத்தி மீது பொலிசார் நடத்திய தாக்குதலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குழந்தைகளை மனித கேடயங்களாக பயன்படுத்துகிறார்கள் என்று கூறி ஜனாதிபதி உட்பட அரசாங்க பேச்சாளர்கள் அந்த தாக்குதலை நியாயப்படுத்தியமையும் இன்று யாருடையகை ஓங்கியிருக்கிறது என்பதற்கான அறிகுறியாகும்.

**அடக்குமுறையை நியாயப்படுத்தல்**

ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் கீழ் அரசாங்க அதிகாரம் மீண்டும் முனைப்புடன் வெளிக்காட்டப்படுவதன் பின்னணியில் இரு காரணிகள் இருக்கின்றன. முதலாவதாக, நாட்டின் ஆட்சிமுறைக்கு முக்கியமானவையாக அரச கட்டிடங்களை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த செயல் மூலமாக போராட்ட இயக்கம் கட்டுமீறிப்போயிருந்தது என்ற கருத்து நாட்டில் பரவலாக காணப்பட்டது. இந்த கட்டிடங்கள் அமெரிக்காவிலும் ஐக்கிய இராச்சியத்திலும் வெள்ளை மாளிகை அல்லது பக்கிங்ஹாம் மாளிகை அதிகாரத்தின் மையங்களாக எவ்வாறு விளங்குகின்றனவோ அதே போன்றே இலங்கையில் அதிகாரத்தின் கோட்டைகளாக அல்லது காப்பரண்களாக விளங்குபவை. உதாரணமாக, அலரிமாளிகை இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து பிரதமர்களின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமாக விளங்கிவருகிறது. அதற்கு மதிப்புக்குரிய வரலாறு ஒன்று உண்டு.

போராட்டக்காரர்கள் குதித்து நீச்சலடித்த தடாகத்தை கொண்டிருந்த ஜனாதிபதி மாளிகையில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் ஆளுநர்கள் வசித்தார்கள். அது இராணி மாளிகை என்று அழைக்கப்பட்டது.. ஆயுதந்தாங்கியவர்கள்

என்பதற்காகவும் போரின்போது தியாகங்களைச் செய்தவர்கள் என்பதற்காகவும் பாரம்பரியமாக மதிக்கப்படுகின்ற பாதுகாப்பு படைகளின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் மரியாதையில்லாத முறையில் போராட்டக்காரர்களில் சிலர் பேசியதை காண்பிக்கும் காணொளிகளை பலரும் மோசமான அத்துமீறலாக நோக்கினார்கள். தலைமைத்துவம் இல்லாததும் கட்டுப்பாட்டை மீறியதுமான போராட்ட இயக்கம் எங்குபோய் நிற்கும் என்ற கேள்வியும் எழுந்தது

இரண்டாவதாக, ஜனாதிபதி விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, தனக்கு முன்னர் பதவியில் இருந்தவர்களைப் போன்று தனிப்பட்ட முறையில் சர்வதேச சமூகத்தின் அணுகுமுறைகளினால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியோ அல்லது சர்வதேச குற்றங்களாக அமையக்கூடிய மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேச நீதிமன்றங்களுக்கு கொண்டுசெல்லப்படக்கூடிய அச்சுறுத்தல் பற்றியோ அவர் கவலைப் படுவதற்கு காரணமில்லை. முன்னர் பிரதமராக பதவி வகித்த காலகட்டங்களில் சமாதானம் மற்றும் நல்லிணக்க செயன்முறைகளில் ஒரு கடப்பாட்டை ஜனாதிபதி எப்போதும் காண்பித்தார்.

2001-- 04 காலப்பகுதியில் பிரதமராக அவர் இருந்தபோது விடுதலை புலிகளுடன் நோர்வேயின் அனுசரணையுடனான போர்நிறுத்தம் மற்றும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றார். 2015 --2019 காலப்பகுதியில் பிரதமராக இருந்தபோது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்குவதற்கு அவர் தனது சம்மதத்தை தெரிவித்தார்.

இலங்கை அரசியலில் மிகப்பெரிய பரிசை விக்கிரமசிங்க பெற்றுக்கொண்ட பிறகு கடந்த நான்கு மாதங்களாக அவர் நாட்டை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நிலையுறுதிப்படுத்துவதற்கு பாடுபட்டுவருகின்றார். போராட்ட இயக்கத்தின் தலைவர்களை கைது செய்வதன் மூலமும் மக்கள் ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க பாதுகாப்பு படைகளை பயன்படுத்துவதன் மூலமும் அந்த இயக்கத்தை அரசியல் ரீதியில் ஜனாதிபதி வலுவிழக்கச் செய்திருக்கிறார். அதன் விளைவாக, வெளித் தோற்றப்பாட்டை பொறுத்தவரை, போராட்ட இயக்கம் ( நாடு பூராவும் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்களை அணிதிரட்டக்கூடியதாக இருந்த நாட்களுடன் ஒப்பிடும்போது ) கடுமையாக சுருங்கிப்போயிருக்கிறது.

தற்போது அரசியல் கட்சிகளின் தீவிர ஆதரவாளர் குழுக்களும் பல்கலைக்கழக மாணவர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் மாத்திரமே பொது ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்க துணிந்து முன்வருகிறார்கள். பொலிசார் சட்டவிரோதமானவை என்று கருதுகின்ற ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பதற்கு முன்னர் விவேகமுடைய எவரும் ஒன்றுக்கு இரு தடவைகள் சிந்தித்துப் பார்ப்பார் எனலாம்.

அடக்குமுறை மூலமாக அரசியல் சமுதாயத்தில் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதிலும் பார்க்க பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவது மிகவும் கூடுதல் சிக்கலானதாக இருக்கிறது. இது வரையில் அரசாங்கம் உயர் பணவீக்கம், மறைமுக வரியறவீடு மற்றும் மானியங்கள் குறைப்பு போன்ற வழிவகைகளின் ஊடாக மக்களிடம் இருந்து வளங்களை திசைதிருப்புவதில் கவனத்தைச் செலுத்திவந்திருக்கிறது. ரஜரட்டையில் சிறுநீரக நோயாளிகளுக்கு தேவையான மானிய அடிப்படையிலான மருந்தை பெறமுடியாமல் உள்ளது. மட்டக்களப்பில் மானிய அடிப்படையில் மொழிபெயர்ப்பாளருக்கான பயிற்சி வாபஸ் பெறப்பட்டுவிட்டது.

சிறுவர்கள் பாடசாலையை விட்டு விலகி கொழும்பில் கட்டிட நிர்மாணப் பகுதிகளுக்கு வேலைக்கு செல்கிறார்கள். இத்தகைய போக்குகள் வறிய மக்களுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. அவர்களினால் போராட்டத்தையும் செய்யமுடியவில்லை. துன்பத்தை மௌனமாக ஏற்றுக்கொண்டு வாழ்க்கையை ஓட்டுவதற்கு திணறுகிறார்கள். இது உடனடியாக கண்ணுக்கு தெரியாத மனித அவலமாகும்.

வரியறவீட்டை உயர்வருமானம் பெறும் மட்டங்களுக்கு விஸ்தரிக்குமாறு அரசாங்கத்துக்கு சர்வதேச நாணய நிதியம் கடுமையான நெருக்குதல் கொடுக்கிறது போன்று இப்போது தெரிகிறது. இந்த மட்டத்தினர் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு ஜனாதிபதிக்கும் அவரது அணிக்கும் வாய்ப்பைக் கொடுக்க இதுவரை முன்வந்தவர்கள். போராட்ட இயக்கத்தின் மீதான அரசாங்கத்தின் அடக்குமுறையையும் கூட இவர்கள் பெருமளவுக்கு ஆதரித்தவர்கள். ஆனால், நேரடி வரியறவீட்டின் ஊடாக அவர்களிடமிருந்து வரிகளைப் பெறுவதற்கு (இது 36 சதவீதத்தை எட்டலாம்) அரசாங்கம் அண்மையில் செய்த அறிவிப்பு வர்த்தக மற்றும் துறைசார் நிபுணர்கள் குழுக்களிடமிருந்து எதிர்ப்பைக் கிளப்பியிருக்கிறது.

சர்வதேச தராதரங்களின் பிரகாரம் நோக்குகையில் 36 சதவீத நேரடி உயர் வரிவிதிப்பு ஒன்றும் வழமைக்கு மாறானது அல்ல. இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கான அடிப்படைக் காரணங்களை ஜனாதிபதியும் அரசாங்கமும் கையாளவில்லை என்ற உணர்வே புதிய வரிக்கொள்கையை எதிர்ப்பவர்களின் சீற்றத்தின் அடிப்படையாகும். நேர்மையான வேலை மூலமாக ஒளிவு மறைவின்றி தங்களது ஜீவாதாரங்களை சம்பாதிப்பவர்கள் பெரிய வரிகளை செலுத்துமாறு கேட்கப்படுகிறார்கள்.

பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்ட நேரத்தில் அதிகாரப் பதவிகளில் இருந்தவர்களும் அந்த வீழ்ச்சிக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாட்டைக் கொண்டவர்களும் மீண்டும் அரசாங்க உயர்பதவிகளுக்கு வந்திருப்பதே குறிப்பாக எரிச்சல் தருவதாக இருக்கிறது. அவர்கள் அப்போது ஒளிவுமறைவற்றவர்களாக இருக்கவில்லை. இப்போதும் அப்படியே. தாங்கள் இறுதியாக விட்ட இடத்தில் இருந்து தொடருவதில் முனைப்புக் காட்டுகிறார்களே தவிர, தங்களின் செயற்பாடுகளினால் நேர்ந்த அவலத்துக்காக பச்சாதாபப்படுபவர்களாக இல்லை.

எரிவாயு, நிலக்கரி மற்றும் பெட்ரோல் போன்ற அத்தியாவசியப் பண்டங்களை கொள்வனவில் பாரிய ஊழல் தொடருவதாக முறைப்பாடுகள் கிளம்பியிருக்கின்றன. முறைப்படி கேள்விப்பத்திரங்கள் கோரப்படாமல் தனி வட்டாரம் மூலமாக புதிய பாரிய உட்கட்டமைப்பு திட்டங்களும் முன்னெடுக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது. வறியவர்களும் வர்த்தக துறையினரும் துறைசார் நிபுணர்களும் உட்பட பொதுவில் மக்களை தியாகம் செய்யுமாறு கேட்பதற்கு முன்னதாக அரசாங்கம் அதன் தார்மீக நியாயப்பாட்டை மீண்டும் பெறுவது இன்றியமையாததாகும்.ஜனநாயக அரசியல் சமுதாயமொன்றில்,தார்மீக நியாயப்பாடு என்பது போராட்டக்காரர்களை கைதுசெய்து அவர்களின் குரல்வளையை நெரிப்பதன் ஊடாக அல்ல தேர்தல்கள் மூலமாகவே வருகிறது.

# உள்ளூராட்சி உறுப்பினர் எண்ணிக்கையை பாதியாக்கும் ரணில் முடிவுக்கு என்ன காரணம்?

**-யூ.எல். மப்றூக்**

இலங்கையிலுள்ள உள்ளூராட்சி சபைகளின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையை பாதியாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 341 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. அவற்றில் மொத்தமாக 8,690 உறுப்பினர்கள் உள்ளனர்.

2018ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் மூலமாகவே, இவ்வாறு அதிக தொகையிலான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதற்கு முந்தைய தேர்தல் 2011ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது மொத்தம் 4,486 உறுப்பினர்கள் தேர்வாகினர்.

ரணில் விக்ரமசிங்க பிரதமராகவும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் இருந்த காலத்திலேயே, தற்போது நடைமுறையிலிருக்கும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம் 2017ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இதன் காரணமாகவே, உள்ளூராட்சி சபைகளின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை - இப்போது உள்ளவாறு 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டதாக அதிகரிக்கப்பட்டது.

அந்த வகையில் ரணில் விக்ரமசிங்கவின் முன்னைய ஆட்சிக் காலத்தில் அதிகரிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் தொகையை, அவரின் தற்போதைய ஆட்சிக் காலத்தில் குறைக்க வேண்டுமெனக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தற்போதுள்ள உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் தொகையைக் குறைப்பதற்கான சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்ட பின்னர்தான், அடுத்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே, உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் ஒரு ஆண்டுக்கு நீட்டிக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே, அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் 4 ஆண்டுகளாகும். அந்த வகையில் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்றது. அதன்படி 2022 பிப்ரவரியுடன் குறித்த சபைகளின் பதவிக் காலம் நிறைவடைந்தன. ஆயினும், 2023 மார்ச் 19ஆம் திகதி வரை, நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் நீட்டிக்கப்படுவதாக கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது அறிவிப்பு வெளியானது.

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் தொகையை அரைவாசியாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறியதை அடுத்து, அது தொடர்பில் கலவையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஆராய்வதற்கு முன்னர், வாசகர்கள் இந்தக் கட்டுரையை இலகுவாக விளங்கிக் கொள்ளும் பொருட்டு, தற்போதுள்ள உள்ளூராட்சி தேர்தல் சட்டம் குறித்தும், இதற்கு முன்னர் இந்தச் சட்டம் எப்படி அமைந்திருந்தது என்பது பற்றியும் இங்கு சுருக்கமாக பார்ப்போம்.

**உள்ளூராட்சி சபைகளும் சட்டங்களும்**

இலங்கை உள்ளூராட்சி சபைகளாக தற்போது மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகியவை காணப்படுகின்றன. 1987ஆம் ஆண்டு "பிரதேச சபை" முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு முன்னர் 1980 இல் "மாவட்ட அபிவிருத்தி சபை" உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த முறைமை வெற்றியளிக்கவில்லை.

பிரதேச சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கான தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர், வட்டார அடிப்படையிலேயே உள்ளூராட்சி சபைகளுக்கு உறுப்பினர்கள் தெரிவாகினர். ஒரு வட்டாரத்துக்கு ஒருவர் எனும் வகையில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் - தமது சபைக்கான தலைவர், துணைத் தலைவர் ஆகியோரைத் தெரிவு செய்தனர்.

இந்த வட்டார முறைமை 1987ம் ஆண்டு பிரதேச சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு இல்லாமல் போனது. அதற்குப் பதிலாக விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை அறிமுகமானது. இதன்படி ஒரு கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு கிடைக்கும் வாக்குகளின் அடிப்படையில், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதிக வாக்குகளைப் பெறுவதன் மூலம் அதிக உறுப்பினர்களைப் பெறும் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து - சபையின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தெரிவு செய்யப்பட்டனர்.



விகிதாசார தேர்தல் முறையின் கீழ், ஒரு கட்சிக்கு அல்லது சுயேச்சை குழுவொன்றுக்கு வாக்களிக்க முடியும். அத்தோடு, எந்தச் சின்னத்துக்கு ஒருவர் வாக்களிக்கிறாரோ, அந்தச் சின்னம் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள் மூவருக்கு அதே வாக்குச் சீட்டில் "விருப்பு வாக்கு"களையும் வழங்க முடியும். அதிக விருப்பு வாக்குகளைப் பெறுவோர் உறுப்பினார்களாக தெரிவாவர்.

இந்த விருப்பு வாக்கு அடிப்படையிலான விகிதாசாரத் தேர்தல் முறைமை, 2012, 2016ம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு, இறுதியில் 2017ம் ஆண்டு "கலப்புத் தேர்தல் முறைமை" கொண்ட - புதிய உள்ளூராட்சித் தேர்தல் சட்டம் உருவாக்கப்பட்டது. அதுவே தற்போது அமலிலுள்ள 2017ம் ஆண்டின் 16ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தப்பட்ட) சட்டமாகும்.

இதன்படி உள்ளூராட்சி சபை உறுப்பினர் தெரிவில் 60 வீதமானோர் வட்டார மட்டத்திலும், 40 வீதமானோர் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுகின்றனர். இந்த சட்டத் திருத்தத்தின் மூலமாக, மொத்த உள்ளூராட்சி சபை உறுப்பினர் தொகையில் 25 சத வீதத்துக்குக்கு குறையாதோர் பெண்களாக இருப்பதும் உறுதி செய்யப்பட்டது.

சரி, இப்போது விடயத்துக்கு வருவோம்.

"உள்ளூராட்சி சபைகளின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைத்த பின்னர்தான் - அடுத்த தேர்தலை நடத்துவது" என ஜனாதிபதி கூறியிருப்பதை, தேர்தலைப் தள்ளிப்போடுவதற்கான ஒரு யுக்தியாகவே பார்க்க வேண்டியுள்ளதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசியல்துறைத் தலைவர் பேராசிரியர் எம்.ஏ.எம். பௌசர் கூறுகிறார்.

ஆயினும், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பது வரவேற்புக்குரியது எனவும் அவர் குறிப்பிட்டார்.

"கலப்பு முறையில் தேர்தல் நடத்தப்பட்டதன் காரணமாகவே உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமானது" என்றும், "வட்டார ரீதியிலும் விகிதாசார அடிப்படையிலும் உறுப்பினர்களை தெரிவு செய்தமையினால் ஏற்பட்ட அதிகரிப்பே இதுவாகும்" எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள கலப்பு தேர்தல் முறைமை - எதிர்பார்த்த அளவில் வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவித்த பேராசிரியர் பௌசர், இந்த கலப்பு முறையின் காரணமாக உள்ளூராட்சி சபைகளில் உறுதியான ஆட்சியை ஏற்படுத்த முடியவில்லை என்றும், சபைகளில் பெரும்பான்மையை உறுதி செய்வதில் அதிகமான இடங்களில் நெருக்கடி ஏற்பட்டது எனவும் கூறினார்.

"திடீரென உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை இம்முறை அதிகரித்தமையினால், பெரும் செலவுகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது. உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவு தொகை அதிகமாகியுள்ளது".

"உள்ளூராட்சி சபைகளுக்கு போதிய வருமானமில்லை. பெரும்பாலும் மாகாண சபை மற்றும் மத்திய அரசின் நிதியியே உள்ளூராட்சி சபைகள் தங்கியுள்ளன. அவற்றின் உள்ளூர் வரி வருமானங்களும் குறைவாகும்".

"இதனடிப்படையில் பார்க்கும்போது, தற்போதைய பொருளாதார நெருக்கடி கால கட்டத்தில், உள்ளூராட்சி உறுப்பினர் தொகையைக் குறைப்பது நல்லதுதான்" என்றார்.

நாட்டின் செலவுகளைக் குறைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது. பொதுத்துறைகளில் செலவுகளைக் குறைப்பதோடு, அரசியல் நிறுவனங்களில் ஏற்படும் மேலதிக செலவுகளையும் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

தற்போதுள்ள கலப்புத் தேர்தல் முறைமையை தொடர்ச்சியாகக் கொண்டு சென்றாலும்கூட, சபைகளின் உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பது நல்லது என பேராசிரியர் பௌசர் குறிப்பிட்டார்.

உறுப்பினர் எண்ணிக்கை குறையும்போது, உறுதியான ஆட்சியை ஏற்படுத்துவது சுலபமாக அமையும் எனவும் அவர் கூறினார்.

"ஆனாலும், உறுப்பினர் எண்ணிக்கையைக் குறைத்த பின்னரே, அடுத்த தேர்தல் நடத்தப்படும் என - ஜனாதிபதி கூறியுள்ளமை, தேர்தலை ஒத்தி வைக்கும் தந்திரமாகும்" என்றார் அவர்.

"நிதியை மிச்சப்படுத்தவேண்டுமானால், சபைகளை கலைத்து விட்டிருக்கலாம்"

"தற்போதைய பொருளாதார நெருக்கடியில், நிதியை மீதப்படுத்த வேண்டுமென அரசாங்கம் உண்மையாகவே விரும்புமாயின், அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் கலைத்து விட்டிருக்கலாம். ஆனால், அதற்கு மாறாக அவற்றின் பதவிக் காலம் ஓர் ஆண்டுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டால் ஆளும் தரப்பினருக்கு அது பாதகமாக அமையும் என்கிறார் பேராசிரியர் பௌசர்.

"உள்ளூராட்சி சபைகள் இப்போது கலைக்கப்பட்டால், அந்த நிலைமை அரசாங்கத்துக்கு மேலும் எதிர்ப்பை ஏற்படுத்தும். சபைகள் கலைக்கப்பட்டால் ஆளும் தரப்பு உறுப்பினர்களாக இருந்தவர்களில் பெரும்பாலானோர் அடுத்த தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, மக்கள் பக்கமும் - ஆர்ப்பாட்டக்காரர்கள் பக்கமும் செல்லத் தொடங்குவார்கள். ஆளும் தரப்பினருக்கு இப்போது மக்கள் ஆதரவு இல்லை என்பதால், அவர்கள் மறுதரப்புக்கு மாறத் தொடங்குவார்கள்".

"இவை நடந்து விடாமல், தமது உள்ளூராட்சி உறுப்பினர்களை - தமது கைகளுக்குள் வைத்திருக்க வேண்டுமென்றால், சபைகளைக் கலைக்காமல் இருப்பதே, இப்போது அரசாங்கத்துக்குள்ள ஒரே வழியாகும்" எனவும் அவர் கூறினார்.

"உள்ளூராட்சி சபைகளைக் கலைத்து விடுவது - பொருளாதார ரீதியில் நாட்டுக்கு பயனுடையதாக அமையும் என்றாலும், கலைக்காமல் இருப்பதுதான் ஆளும் தரப்பினருக்கு அரசியல் ரீதியில் நன்மையாக அமையும்" எனவும் பேராசிரியர் பௌசர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி எம்.ஏ. அன்சிலுடன் பேசிய போது "உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் தொகையை குறைப்பது நல்லது" என, அவர் கூறியதோடு, தற்போதுள்ள கலப்புத் தேர்தல் முறையில் உள்ள பல விடயங்கள் திருத்தப்படவும் வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

"உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் தொகை அதிகம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பல சபைகளில் அங்குள்ள உறுப்பினர்கள் செய்வதற்கான வேலைகள் எவையும் இல்லை" எனவும் அவர் கூறினார்.

"வட்டார முறைமை நல்லதுதான். ஒவ்வொரு உறுப்பினருக்குமான நிர்வாக எல்லையை குறித்தொதுக்கும்போது, அவர்களின் வேலைகளை சிறப்பாக ஒழுங்குபடுத்த முடியும். ஆனால், ஒரு வட்டாரத்தில் மக்களால் ஒருவர் தெரிவு செய்யப்படுகின்ற அதே வேளை, அதே வட்டாரத்துக்கு விகிதாரசார அடிப்படையில் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படாதவரும் நியமிக்கப்படுகின்றார். இதனாலேயே உறுப்பினர்கள் தொகை அதிகரிக்கிறது" என்றார்.


கலப்பு தேர்தல் முறைமையை தொடர்ந்தும் பின்பற்றுவதாக இருந்தால், வட்டாரங்களின் எண்ணிக்கையை குறைப்பதன் ஊடாக, உறுப்பினர்கள் எண்ணிக்கையை குறைக்க முடியும் என, சட்டத்தரணி அன்சில் யோசனையொன்றை முன்வைத்தார். ஆனாலும், பழைய விகிதாசார முறைமையே நல்லது என, அவர் தெரிவித்தார்.

"விகிதாசார முறைமையில் அதிக வாக்குகளைப் பெற்ற தரப்புக்கே சபையின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவி வழங்கப்படும். அந்த முறைமையின் கீழ், கூட்டிணைந்து ஆட்சியமைக்க முடியாது. ஆனால், தற்போதைய கலப்பு முறைமையின் கீழ், குறைந்த வாக்குகளைப் பெற்ற அல்லது தோல்வியடைந்த தரப்பு ஆட்சியமைக்கும் நிலைவரம் உருவாகியுள்ளது" என்றார்.

**(பிபிசி)**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

.........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..........................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ...................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 11100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

## கல்வி tv CHANNEL-1

**19.10.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**19.10.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## சம்மாந்துறை வைத்தியசாலை மாகாண ரீதியில் இரண்டாமிடம்

அம்பாறை, ஒக். 19

உலக நோயாளர் தினத்தை முன்னிட்டு உலக சுகாதார நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து நடத்திய மாகாண சுகாதார நிறுவனங்கிடையிலான போட்டியில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதனை கௌரவிக்கும் முகமாக நேற்று சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் இப்போட்டியில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதி பணிப்பாளர் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி உள்ளிட்ட பிரிவுத்தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியதுடன் தமது வாழ்த்துக்களையும் பறிமாற்றிக் கொண்டனர். (அ)

## நற்பிட்டிமுனை வீரர்களுக்கு பாராட்டு



அம்பாறை, ஒக். 19

கிழக்கு மாகாண விளையாட்டு போட்டிகளில் சாதனை படைத்து தேசிய போட்டிக்கு தெரிவான நற்பிட்டிமுனை வீரர்கள் இருவருக்கு நற்பிட்டிமுனை அல் -கரீம் பவுண்டேஷன் ஏற்பாட்டில் சாதனையாளர் பாராட்டு நிகழ்வு சவளக்கடையில் நடைபெற்றது.

அல் -கரீம் பவுண்டேஷன் தலைவர் சீ.எம். ஹலீம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பரிதி வட்டம் வீசும் போட்டியில் வெளிப்பதக்கம் வென்ற அமீருன் பாத்திமா அஸ்தாவுக்கு “சாதனை மங்கை” விருதும், நீளம் பாய்தல் போட்டியில் வெள்ளிப் பதக்கமும், 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கமும் வென்ற ஜபாஹிர் முகம்மட் முஆத்திற்கு ”சாதனை வீரன்” விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆஷிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீரர்களைப் பாராட்டி உரையாற்றினார். (அ)

# கிழக்கில் 50,000 ஏக்கர் காணிகள் ஆக்கிரமிப்பு!

### பொத்துவில் கனகர் கிராம உலக உணவு தினத்தில் கருத்து

அம்பாறை,ஒக்.19

**“கிழக்கைப் பொறுத்த வரையில் சுமார் 50000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் அரசு மற்றும் பல்வேறு தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் காரணமாக தமக்கான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.**

பல்வேறு வழிகளிலும் மக்களின் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள்

விடுவிக்கப்படுமாயின் அவர்களின் வீட்டுத் தேவைக்கான உணவையேனும் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கும் என்பது உறுதியான விடயமாகும்.”

-இவ்வாறு சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் பிரதிநிதி ரி.காத்தவராயன் தெரிவித்தார்.



சர்வதேச உணவு தினத்தை முன்னிட்டு, சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பு ,அம்பாறை மாவட்டத்தின் யுத்தத்தால் இடம்பெயர்ந்த கனகர் கிராம மக்களின் காணிகளில் தானியச் செய்கையை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தை மேற்கொண்டது.

இதற்கமைய கனகர் கிராமத்தில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியேறுவதற்கு பல்வேறு எதிர்ப்புக்களைச் சந்தித்த மக்கள் தற்போது துணிச்சலாக தமது காணிகளை துப்பரவு செய்து வருகின்றனர். இவ்வாறு தமது பூர்வீக காணிகளை துப்பரவு செய்துள்ள 25 பயனாளிகள் தானியச் செய்கைக் காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பயறு,சோளன்,கச்சான் ஆகிய தானிய வகைகள் வழங்கப்பட்டதோடு அம்மக்களின் காணிகளில் அவர்களின் இருப்பை உறுதிப்படுத்தித் தரக்கோரி அரசதிணைக்களங்களுக்கும் பரிந்துரை செய்யும் செயற்பாடு திட்டமிடப்பட்டது.

இருந்தாலும் அரச திணைக்களங்கள் மக்கள் மீளக்குடியேறுவதற்கு எதிர்ப்பாக உள்ளமையால் மக்களாகவே தமது பூர்வீக காணிகளில் இன்று பயிர்ச்செய்கையை ஆரம்பித்து சுமார் 32 வருடங்களுக்குப் பின் காணிகளில் குடியேறியுள்ளனர்.

இம்மக்கள் மீளக்குடியேறுவதற்கு பக்க பலமாக உள்ள சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பிற்கு நன்றியைத் தெரிவித்ததோடு தமது பூர்வீக காணிகளை இனி எந்த சந்தரப்பத்திலும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதையும் உறுதியாகக் கூறினர்.

இங்கு மேலும் கருத்து வெளியிட்ட காத்தவராயன்-

சர்வதேச உணவு தினம் அனுஷ்டிக்கப்படுகின்ற இவ்வாறான நிலையில் இதற்கு மறுபுறம் இலங்கையின் பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் மோசமாகும் நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த நிலை காரணமாக மக்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு வேளை உணவுத் தேவை யைப் பூர்த்தி செய்வதற்கும் மக்கள் பெரும் போராட்டங்களைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்கள் இதுவரை தமக்கான சரியான அரசியல் தீர்வு கிடைக்காத நிலையில் மேலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அந்த நிலைக்கு தற்போதைய பொருளாதார நெருக்கடி ஒரு காரணமாக அமைந்தாலும் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு தரப்பினராலும் மக்களின் காணிகள் ஆக்கிர மிக்கப்பட்டுள்ளமையும் முக்கிய காரணமாகும்.

கிழக்கைப் பொறுத்த வரையில் சுமார் 50000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் அரசு மற்றும் பல்வேறு தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதன் காரணமாக தமக்கான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு வழிகளிலும் மக்களின் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படுமாயின் அவர்களின் வீட்டுத் தேவைக்கான உணவையேனும் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கும் என்பது உறுதியான விடயமாகும்.

இந்த நிலையை எமது அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டியது முக்கிய விடயமாகும்-என றார். (அ)

## மட்டக்களப்பு உற்பத்தித்துறையை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை!

மட்டக்களப்பு, ஒக். 19

மட்டக்களப்பு மாவட்டத்தின் உற்பத்தித்துறையை வளர்ச்சிப்பாதைக்கு கொண்டுசெல்லும் வகையில் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக உணவு தினம் மற்றும் உலக வறுமையொழிப்பு தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படும் அமைப்புகளுடனான கலந்துரையாடல் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில்,விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அதன் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில்,விவசாய சம்மேளனத்தின் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிக்காந்த் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்த சந்திப்பில் கிழக்கு பல்கலைக் கழகத்தின் சமூக மற்றும் தொழில்துறைகளுடன் இணைக்கும் நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர் எம்.அருளானந்தம் உட்பட பொது அமைப்புகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாய அமைப்புகளின் பிரதி நிதிகள், பொருளாதார நிபுணர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கிழக்கு மாகாணம் அனைத்து வளங்களையும் கொண்ட மாகாணமாக உள்ளபோதிலும் உற்பத்தித்துறை மிகவும் மந்த கதியில் உள்ளமை தொடர்பிலும் இங்கிருந்து ஏற்றுமதிக்கான பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கான கட்டமைப்பை உருவாக்குவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக விவசாயத்தின் மூலம் இலங்கையில் நெல் உற்பத்தியில் மூன்றாவது மாகாணமாக கிழக்கு மாகாணம் உள்ளபோதிலும் விவசாயிகள் நெல் உற்பத்தியில் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழகத்தை பயன்படுத்தி மட்டக்களப்பில் உற்பத்தித்துறையை மேம்படுத்துவதற்கு கட்டமைப்பு ஒன்றை உருவாக்கிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் எதிர்காலத்தில் அனைத்து துறையினரையும் ஒருங்கிணைத்து கட்டமைப்பு உருவாக்குவது குறித்தும் ஆராயப்பட்டது. (அ)



# மாடிக் குடியிருப்பின் மீது வீழ்ந்தது ரஷ்ய விமானம்

## நால்வர் உயிரிழப்பு

மொஸ்கோ, ஒக். 19

ரஷ்யாவின் யேஸ்க் நகரிலுள்ள மாடி குடியிருப் பொன்றின் மீது போர் விமானமொன்று வீழ்ந்து விபத் துக்குள்ளாகியதில் குறைந்தது 4 பேர் உயிரிழந்துள் ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 25 இற்கும் அதிகமானோர் காயம டைந்துள்ளனர்.

விமானம் வீழ்ந்ததை அடுத்து குறித்த மாடி குடி யிருப்பில் தீ பரவியதாக அந்நாட்டு செய்திகள் தெரி விக்கின்றன.

பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த, விபத்திற்குள் ளான எஸ்.யு-34 ரக போர் விமானத்தின் இயந்திரத்தில் தீ பிடித்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரி வித்துள்ளது. (அ)

# சீன இராணுவத்தால் கவர்ந்திழுக்கப்படும் பிரிட்டன் முன்னாள் இராணுவ விமானிகள்!

## பெரும்தொகைப் பணம் சம்பளமாக வழங்க முடிவு

லண்டன், ஒக். 19



பிரித்தானிய முன்னாள் இராணுவ விமானிகள் சீன இரா ணுவத்திற்கு பயிற்சிகளை வழங்கு வதற்காக பெருந்தொகைப் பணத் துடன் சீனாவுக்கு இழுக்கப்படு கின்றனர்.

30 முன்னாள் பிரித்தானிய இராணுவ விமானிகள் வரை சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் உறுப்பினர்க ளுக்கு பயிற்சி அளிக்க சென்றதாகக் கருதப்படுகிறது.

சீன இராணுவத்தில் பணி புரியும் முன்னாள் இராணுவ விமானிகளுக்கு பிரித்தானிய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

விமானிகளைக் கவர்ந்தீர்க்கும் முயற்சிகள் நடந்து வருவதாகவும், சமீபத்தில் அது அதிகரித்து வருவதா கவும் மேற்கு அதிகாரிகள் கூறுகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பா ளர் கூறுகையில், விமானிகளின் பயிற்சி மற்றும் ஆட் சேர்ப்பு தற்போதைய பிரித்தானிய சட்டத்தை மீற வில்லை, ஆனால் பிரித்தானிய மற்றும் பிற நாடுகளில் உள்ள அதிகாரிகள் செயற்பாட்டைத் தடுக்க முயற்சிக் கின்றனர் - என கூறினார்.

237,911 பவுண்டுகள் வரை முன்னாள் இராணுவ விமானிகளுக்கு வழங்கப்படுமென மேற்கத்திய அதி காரி கூறினார்.

ஓய்வுபெற்ற பிரித்தானிய விமானிகள் மேற்கத்திய விமானங்கள் மற்றும் விமானிகள் செயற்படும் விதத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறார்கள். இது தாய் வான் போன்ற ஏதேனும் மோதல்கள் ஏற்பட்டால் அது முக்கியமானதாக இருக்கும். (அ)

# சர்ச்சைக்குரிய வரிக் குறைப்புகளை நீக்குவதாக அறிவித்தது இங்கிலாந்து



லண்டன், ஒக். 19

நிதிச் சந்தைகளை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் கடந்த மாதம் இங்கிலாந்து அரசாங்கம் அறிவித்த கிட்டத்தட்ட அனைத்து வரிக் குறைப்புகளையும் நீக்குவதாக திறைசேரியின் புதிய தலைவர் ஜெரமி ஹன்ட் அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் 23ஆம் திகதி லிஸ் ட்ரஸ் அறிமுகப் படுத்திய சர்ச்சைக்குரிய மினி பட்ஜெட்டில், நிறுவ னங்களுக்கான வரி உயர்வு, அதிக வருவாய் உடைய வர்களுக்கு 45 சதவீத உயர் வரி போன்றவற்றை இரத்து செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்பின் எதிரொலியாக பிரித்தானிய பொருளாதாரம் நிலைகுலைந்து, டொலருக்கு நிகரான பிரித்தானிய பவுண்டின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியடைந்தது.

அதையடுத்து, அதுவரை திறைசேரியின் தலைவராக இருந்த க்வாசி க்வார்டெங்கை வெள்ளிக்கிழமை நீக்கிய ட்ரஸ், அந்தப் பொறுப்புக்கு ஜெரிமி ஹன்டை நியமித்தார். இந்த நிலையில் அவர் தனது முதல் நடவடிக்கையாக வரிக் குறைப்புகளை நீக்குவதாக அறிவித்தார்.

மினி பட்ஜெட்களால் ஏற்பட்ட நிதிக் கொந் தளிப்பை தொடர்ந்து, பிரதமர் லிஸ் ட்ரஸுக்கு சொந்த கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

அவரது சொந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 5 பேர் இப்போது அவரை இராஜினாமா செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

இன்னும் பல கன்சர்வேடிவ் பாராளுமன்ற உறுப்பி னர்கள் பிரதமரை அநாமதேய விளக்கங்களில் இருந்து விலகுமாறு அழைப்பு விடுக்கின்றனர்.

ஆனால், ட்ரஸ் அடுத்த பொதுத் தேர்தலில் கன்சர் வேடிவ் கட்சியை வழிநடத்த விரும்புவதாகவும், தவறு களுக்கு மன்னிப்புக் கோருவதாகவும் கூறினார். (அ)

# உக்ரைனின் எரிசக்தி வசதிகளை குறிவைத்து ரஷ்ய படை தாக்குதல்!

கீவ், ஒக். 19



உக்ரைனின் எரிசக்தி வசதிகளை குறிவைத்து தலை நகர் கிவ் மற்றும் பிற முக்கிய நகரங்க ளில் ரஷ்யப் படைகள் மீண்டும் தாக்குதல் களை நடத்தியுள்ளன.

தலைநகர் கிவ்வில் மூன்று வெடிப்புகள் நடந்ததாக ஜனாதிபதி உதவியாளர் கைரிலோ திமோஷென்கோ கூறினார்.

மத்திய நகரமான டினிப்ரோவில் இரண்டு வசதிகள் கடுமையாக சேதமடைந்தன மற்றும் சைட்டோமை ரில் மின்வெட்டுகள் பதிவாகியுள்ளன.

ஈரானின் காமிகேஸ் ஆளில்லா விமானங்களால் தாக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குப் பிறகு சமீபத்திய தாக்குதல்கள் நடந்துள்ளன.

ஈரானில் தயாரிக்கப்பட்டதாக நம்பப்படும் ஆளில்லா ஆளில்லா விமானங்கள் தலைநகர் மற்றும் வடக்கு நகரமான சுமியில் குறைந்தது எட்டு பேரைக் கொன்றன.

மேலும் முக்கியமான உட்கட்டமைப்பைத் தாக் கின. நூற்றுக்கணக்கான நகரங்கள் மற்றும் கிராமங் களில் மின்சாரம் தடைப்பட்டது. (அ)

# நைஜீரியாவில் என்றுமில்லாத மோசமான வெள்ளப் பெருக்கு!

## 600க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

அபுஜா, ஒக். 19

நைஜீரியாவில் ஒரு தசாப்தத்தில் காணப்படாத மிக மோசமான வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 600பேரைக் கடந்துள்ளது என்று நாட்டின் மனிதாபிமான விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு கன மழை மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட வெள்ளம் உள்ளிட்ட பேரிடரில் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 603ஆக அதிகரித்துள்ளது.

அமைச்சின் கூற்றுப்படி, 2 மில்லியனுக்கும் அதிக மான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர், இது குறிப்பாக மழைக்காலத்திற்குப் பிறகு நாட்டின் தெற்கின் சில பகுதிகளில் பரவியுள்ளது.

200,000க்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையா கவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்துள்ளதாக அமைச்சகம் மேலும் கூறியுள்ளது.

இந்த வெள்ளத்தால் நாட்டின் 36 மாகாணங்களில் 33 மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. 13 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பேரிடர் காரண மாக தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி தவித்து வருகின்றனர். 3.4 லட்சம் ஹெக்ரேயர் வயல் வெளி பயனற்றுப் போனதால் உணவுப் பற்றாக்குறை அபாயம் நிலவி வருகிறது.

இந்த மாத தொடக்கத்தில், நைஜீரியாவின் தேசிய அவசரநிலை மேலாண்மை நிறுவனம் நைஜர் மற்றும் பெனு நதிகளின் பாதைகளில் அமைந்துள்ள மாநிலங் களுக்கு பேரழிவு வெள்ளம் குறித்து எச்சரித்தது.



நைஜீரியாவின் மூன்று நிரம்பிய நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அண்டை நாடான கேமரூனில் உள்ள ஒரு அணையில் இருந்து உபரி நீரை வெளியேற்றியது வெள்ளத்திற்கு பங்களித்ததாக கூறப்படுகின்றது.

நைஜீரியாவின் பல பகுதிகள் ஆண்டுதோறும் வெள் ளத்தால் பாதிக்கப்படும் அதே வேளையில், சில பகுதி களில் வெள்ளம் கடந்த 2012இல் ஏற்பட்ட பெரிய வெள் ளத்தை விட மிகவும் கடுமையானதாக உள்ளது என கோகியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ளது மற்றும் அதற்கேற்ப தயாராகுமாறு பிராந்திய அரசாங்கங் களை நைஜீரியாவின் மனிதாபிமான விவகார அமைச் சர் சாடியா உமர் ஃபாரூக் வலியுறுத்தினார். (அ)



# ‘பலன் டி ஓர்’ விருது கரீம் பென்சிமா வசம்!

பாரிஸ், ஒக். 19

நடப்பு ஆண்டுக்கான பலன் டி ஓர் விருதை வென்ற பிரான்ஸ் நாட்டு உதைபந்தாட்ட வீரர் கரீம் பென்சிமா வென்றுள்ளார்.

அவர், இந்த விருதை மக்களுக்கு அர்ப்பணிப்பதாக தெரிவித்துள்ளார். இந்த விருதை வென்ற மூத்த வயது வீரர்களில் ஒருவராக அவர் உள்ளார். வரும் டிசெம்பர் மாதம் அவர் 35 வயதை நிறைவு செய்ய உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சு இதழான ‘பிரான்ஸ் புட்போல்’ கடந்த 1956 முதல் இந்த விருதை சிறந்த உதைபந்தாட்ட வீரர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. விருதுக்கு பரிந்துரைக்கப்படும் வீரர்களில் இருந்து சிறந்த வீரர் வாக்கெடுப்பு மூலம் தேர்வு செய்யப்படுகிறார். அதிகபட்சமாக மெஸ்ஸி இந்த விருதை 7 முறை வென்றுள்ளார். ரொனால்டோ 20 முறை இந்த விருதை வெல்வதற்கான பரிந்துரையில் இடம் பெற்றுள்ளார். அவர் 5 முறை இந்த விருதை வென்றுள்ளார்.

நடப்பு ஆண்டுக்கான விருதை வெல்லும் வீரர்களுக்கான பரிந்துரை பட்டியலில் ஆடவர் பிரிவில் மொத்தம் 30 உதைபந்தாட்ட வீரர்கள் பரிந்துரைக்கப்பட்டு இருந்தனர். அதில் பென்சிமா, லெவோண்டஸ்கி, கெவின் டி ப்ரூய்ன், முகமது சாலா ஆகிய வீரர்கள் விருதை வெல்லும் வரிசையில் இருந்தனர்.

எதிர்பார்த்ததைப் போலவே பென்சிமா விருதை வென்றுள்ளார். “இந்த விருதை வெல்ல வேண்டுமென்ற எண்ணம் எனக்குள் எப்போதும் இருந்தது உண்டு. ஆனால் 30 வயதை கடந்த பிறகு அது இலட்சியமாக மாறியது. அதை எனது தலைக்குள் ஏற்றிக் கொண்டேன். நான் சொல்லும் இலட்சியம் கடினமாக உழைப்பது. எனது அணிக்கு தலைவனாக இருப்பதிலும், ரியல் மட்ரிட் அணியில் விளையாடுவதும் நான் பெற்ற பாக்கியம். கடினமான தருணங்களை கடந்து வந்துள்ளேன். என்னோடு கழக அணியில் விளையாடும் வீரரர்கள், அவர்களின் நாட்டுக்காகவும் விளையாடி வந்தனர். ஆனால், நானோ அந்நேரத்தில் கழக மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டு வந்தேன். களத்தில் எனது உழைப்பை எண்ணி மகிழ்கிறேன், பெருமை கொள்கிறேன்” என விருதை பெற்றுக் கொண்ட பென்சிமா தெரிவித்திருந்தார். (ஐ)

# நமீபியாவை அதிரடியாக வென்றது நெதர்லாந்து!

மெல்பர்ன், ஒக். 19

நமீபியாவுக்கு எதிரான போட்டியில் 5 விக்கெட்களால் நெதர்லாந்து வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபது 20 உலகக் கிண்ணத்தில் நேற்று நடந்த போட்டியில் நெதர்லாந்து - நமீபியா மோதின. இதில், போட்டியில் நமீபியாவை சகல துறைகளி லும் விஞ்சும் வகையில் விளையாடிய நெதர்லாந்து அபார வெற்றியை பெற்றது.




நமீபியா வெற்றிக்காக நிர்ணயித்த 122 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நெதர் லாந்து 19.3 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில், மெக்ஸ் ஓ டவ்ட், விக்ரம்ஜித் சிங் ஆகிய இருவரும் 8.2 ஓவர்களில் 59 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

முதலாவதாக ஆட்டம் இழந்த விக்ரம்ஜித் சிங் 31 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 39 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து 2ஆவது விக்கெட்டில் பாஸ் டி லீடுடன் 2ஆவது விக்கெட்டில் மேலும் 33 ஓட்டங்களைப் பகிர்ந்த மெக்ஸ் ஓ டவ்ட் 35 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

மொத்த எண்ணிக்கை 101 ஓட் டங்களாக இருந்த போது ரொம் கூப்பர் (6), கொலின் அக்கர்மன் (0) ஆகிய இருவரும் ஒரே ஓவரில் ஆட்டமிழந்தனர்.

மொத்த எண்ணிக்கைக்கு மேலும் 4 ஓட்டங்கள் மாத்திரம் சேர்ந்தபோது அணித் தலைவர் ஸ்கொட் எட்வேர்ட்ஸ் (1) களம் விட்டகன்றார். எனினும், நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய பாஸ் டி லீட் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களைப் பெற்று நெதர்லாந்தின் வெற்றியை உறுதி செய்தார். டொம் ப்ரிங்ள் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபியா 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 121ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரர் டிவான் டி கொக் (0) 2ஆவது ஓவரில் ஆட்டமிழந்த தால் நமீபியாவின் ஆரம்பம் சிறப் பாக அமையவில்லை. எனினும் அடுத்து ஜோடி சேர்ந்த மைக்கல் வன் லிங்கென் (20), ஸ்டெபான் பார்ட் (19) ஆகிய இருவரும் நிதா னத்துடன் துடுப்பெடுத்தாடி மொத்த எண்ணிக்கையை 30 ஓட்டங்களாக உயர்த்திய போது வன் லிங்கென் ஆட்டமிழந்தார்.

எனினும், இலங்கைக்கு எதிரான போட்டியில் துடுப்பாட்டத்தில் பிரகாசித்து ஆட்ட நாயகனான ஜான் பிறைலின்க் மீண்டும் அணியை மீட்டெடுப்பதில் பங்காற்றினார்.

ஸ்டெபான் பார்டுடன் 4ஆவது விக்கெட்டில் 31 ஓட்டங்களையும் அணித் தலைவர் கேர்ஹார்ட் இரேஸ் முஸூடன் 5ஆவது விக்கெட்டில் 41 ஓட்டங்களையும் ஜான் பிறைலின்க் பகிர்ந்து அணியை வீழ்ச்சியிலி ருந்து மீட்டார். பிறைலின்க் திறமையாகத் துடுப் பெடுத்தாடி 43 ஓட்டங்களைப் பெற்றார். அவருக்கு பக்க பலமாக துடுப்பெடுத்தாடிய ஸ்டெஃபான் பார்ட் 19 ஓட்டங்க ளையும் ஜேர்ஹார்ட் இரேஸ்மூஸ் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

டேவிஸ் வைஸ் 11 ஓட்டங்களுடனும் ஜொஹானெஸ் ஸ்மித் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

நெதர்லாந்தின் பந்துவீச்சில் பாஸ் டி லீட் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.(ஐ)

# வடக்கின் சமர் உதைபந்தில் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில் ஊரெழு றோயல் விளையாட்டு கழகம் வடக்கின் சமர் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்துகிறது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடக்கும் இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரண்டாவது சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

இதில், பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை யங்ஹென்றிஸ், உரும்பிராய் திருக்குமரன் அணிகள் எதிர்த்தாடவுள்ளன. மாலை 4.30 மணிக்கு நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் யாழ்ப்பாணம் சென். றோக்ஸ் அணியும் மோதவுள்ளன.

## இருபது - 20 உலகக் கிண்ணம்:

# சிம்பாப்வே அணியிடம் வீழ்ந்தது அயர்லாந்து!

ஹோபர்ட், ஒக். 19

இருபது -20 உலகக் கிண்ணத் கிரிக்கெட் தொடரில் அயர்லாந்தை 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது சிம்பாப்வே அணி.

ஹோபார்ட்டில் உள்ள பெல்லரிவ் ஓவல் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 174 ஓட்டங்கள் குவித்தது.

அதிகபட்சமாக ஷிகந்தர் ராஸா 48 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 82 ஓட்டங்கள் விளாசினார்.

அயர்லாந்து அணி சார்பில் ஜோஸ் லிட்டில் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

175 ஓட்டங்கள் இலக்குடன் பேட் செய்த அயர்லாந்து அணி 22 ஓட்டங்களை சேர்ப்பதற்குள் 4 விக்கெட்களை இழந்து சரிவை சந்தித்தது.

போல் ஸ்டிர்லிங் 0, அன்டி போல்பிரினி 3, லார்கன் டக்கர் 11, ஹாரி டெக்டர் ஓர் ஓட்டத்துடன் நடையை கட்டினர். சிறிது தாக்குப்பிடித்து விளையாடிய கர்டிஸ் கேம்பர் 27, ஜோர்ஜ் டாக்ரெல் 24, கரேத் டெலானி 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.




இவர்களைத் தொடர்ந்து மார்க் அடேர் 9, சிமி சிங் 0 ஓட்டங்களில் நடையை கட்டினர். இறுதிக்கட்டத்தில் பாரி மெக்கார்த்தி 22, ஜோஸ் லிட்டில் 7 ஓட்டங்கள் சேர்த்தனர்.

முடிவில் 20 ஓவர்களில் அயர்லாந்து அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 143 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது.

சிம்பாப்வே அணி சார்பில் பிளெஸ்ஸிங் முசரபானி 3 விக்கெட்களையும் ரிச்சர்ட் நகரவா, தென்டை சத்தரா ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)

# உலகக் கிண்ணத்தில் ஹட்ரிக் சாதனை படைத்த தமிழ் வீரர்!

ஜிலாங், ஒக். 19

நடப்பு இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்கு எதிரான முதல் சுற்று போட்டியில் ஐக்கிய அரபு அமீரக அணிக்காக விளையாடி வரும் இளம் சுழல்பந்து வீச்சாளரான கார்த்திக் மெய்யப்பன், ஹட்ரிக் சாதனை படைத்தார்.



இது இந்த தொடரின் முதல் ஹட்ரிக் ஆக அமைந்துள்ளது.

22 வயது தமிழரான இவர், தமிழ்நாடு சென்னையில் பிறந்தவர். அவரின் குடும்பம் துபாயில் குடியேறியது. மிக இளம் வயதில் இருந்து கிரிக்கெட் விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர், நேற்று நடந்த இலங்கைக்கு எதிரான போட்டியில் பானுக ராஜபக்ஷ, அசலங்கா, தசுன் சானக ஆகியோரை அடுத்தடுத்த பந்துகளில் வீழ்த்தி ஹட்ரிக் சாதனையைப் படைத்திருந்தார். (ஐ)



# மருத்துவ உபகரணங்களை கையளித்தார் அமெ. தூதுவர்

கொழும்பு, ஒக். 19

நாட்டின் அவசர மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சினால் சுகாதார அமைச்சிற்கு மருத்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த மருத்துவ உபகரணங்களை பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சுகாதார அமைச்சிடம் கையளித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களுக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் அதில் அடங்குகின்றன.

இதேவேளை, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோருக்கிடையே நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, கருத்துரைத்த அமைச்சர், நாட்டு மக்களின் போசாக்கை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக குறிப்பிட்டார். (அ)

# 17,820 கிலோ அரிசி மாயம் பொலிஸ் தீவிர விசாரணை!

கொழும்பு, ஒக். 19

கால்நடை தீவனமாக ஐந்து பாரவூர்திகளில் கொண்டு செல்லப்பட்ட சுமார் 3 மில்லியன் ரூபா பெறுமதியான 17,820 கிலோ அரிசி காணாமல் போனமை தொடர்பில் மோதரை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வத்தளை எலகந்தவில் உள்ள களஞ்சியசாலையில் இருந்து மோதரையில் உள்ள நிறுவன வளாகத்துக்கு கொண்டு வரப்பட்ட அரிசி இருப்பு காணாமல்போனதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சரக்குகளை எடைபோட்ட பின்னர் , லொறிகள் நிறுவன வளாகத்துக்கு வெளியே ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் நிறுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அரிசி லொறியை மீண்டும் நிறுவனத்திற்குள் கொண்டு வந்தபோது, லொறியை தராசில் வைத்து எடை பார்த்ததில், அசல் எடையை விட எடை குறைவாக இருந்ததால், அரிசி திருடப்பட்ட தகவல் தெரியவந்துள்ளது. (அ)

# 22 ஐ ஆதரிப்பதற்கு பெரமுன 2 நிபந்தனைகள் முன்வைப்பு

கொழும்பு, ஒக். 19

22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு வாக்களிப்பதற்காக பொதுஜன பெரமுன இரண்டு நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

இரட்டைக் குடியுரிமையை தொடர்வது மற்றும் நான்கரை ஆண்டுகளுக்கு பாராளுமன்றத்தை கலைக்க முடியாது ஆகிய இரண்டு நிபந்தனைகளை அது முன்வைத்துள்ளது என கூறப்படுகின்றது.

அந்த இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்படாவிட்டால், 22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு வாக்களிக்க முடியாது என்றும் அது அறிவித்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இவ்விடயம் பேசப்பட்டதுடன், முதன்முறையாக சட்டமா அதிபரும் இதில் கலந்து கொண்டார் என தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, நான்கரை வருடங்கள் நிறைவடையும் வரை பாராளுமன்றத்தைக் கலைக்கப்போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆளும் கட்சிக் கூட்டத்தில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரான்ஸ் எரிபொருள் நெருக்கடியுடன் ராஜபக்ஷக்களுக்கு தொடர்பு உண்டா?

## கேள்வி எழுப்புகிறார் மகிந்தானந்த

கொழும்பு, ஒக். 19

**பிரான்சில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பட்டினியால் வாடும் நிலைமைகளுக்கும் ராஜபக்ஷக்களுக்கு தொடர்பு உள்ளதா என அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே கேள்வி எழுப்பினார்.**

நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர்,

பிரான்சிலும் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பட்டினி நிலை ஏற்பட்டுள்ளது . அங்கும் பாடசாலை மாணவர்கள் உணவின்றி மதிய உணவுப் பெட்டிகளைக் கொண்டு செல்கின்றனர்

இவை அனைத்தும் உலகப் பொருளாதார நெருக்கடியின் விளைவாக, கொவிட் தொற்று நோயுடன் வந்ததை நாம் மறந்துவிட முடியாது. பூச்சியத்தில் இருந்த நாட்டின் பணவீக்கம் 10 ஆக அதிகரித்துள்ளது. பிரான்சில் எரிபொருள் வரிசைகள் உள்ளன. அங்கும் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்க முடியவில்லை, இங்கிலாந்தையும், பிரான்ஸையும் ராஜபக்சக்களா ஆண்டார்கள் என்று நாங்கள் கேட்கிறோம். இந்தப் பிரச்னைகள் எல்லாம் அவர்களால் உருவாக்கப்பட்டதா, அதற்கு அவர்களா பொறுப்பு?"



இது ஒரு உலகளாவிய பொருளாதார நெருக்கடி. நாங்கள் எப்போதும் இறக்குமதிப் பொருளாதாரத்திற்குப் பழக்கப்பட்டதால் அந்த நெருக்கடி தீவிரமானது . நாங்கள் எல்லாவற்றையும் மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்தோம் .

எனவே, எங்களால் இந்த பொருளாதாரத்தை சரியான முறையில் நிர்வகிக்க முடியவில்லை. இதன் விளைவாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டியிருந்தது-என்றார். (அ)

# வடக்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவையில் பயன் பெறுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 19

வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 22ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கைதடியில் இடம்பெறவுள்ள நடமாடும் சேவையில் வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை உறுப்பினரும், வடமாகாண தனியார் பஸ் சங்கத்தின் தலைவருமான சி,சிவபரன் கேட்டுள்ளார்.

நீண்ட காலமாக வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபட்டு வரும் பஸ்களுக்கான வருடாந்த வருமான வரி பத்திரத்தைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகளை அதன் உரிமையாளர்கள் எதிர்நோக்கி வருகின்றார்கள்.

எனவே அந்த இடர்பாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக நீண்ட காலமாக நமது சங்கத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினரின் ஏற்பாட்டில் மாபெரும் நடமாடும் சேவை எதிர்வரும் 22 ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் கைதடியில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் கொழும்பில் சென்று மேற்கொள்ள வேண்டிய அனைத்து செயற்பாடுகளையும் இங்கே ஒரே நாளில் ஓரிடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பேருந்து உரிமையாளர்களும் தங்களுடைய ஆவணங்கள் அனைத்தையும் கொண்டு வந்து நடமாடும் சேவையில் தங்களுக்குரிய சேவையினை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ)

# கோப் உறுப்பினராக சரித ஹேரத்

கொழும்பு, ஒக். 19

பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் இராஜினாமாவை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தெரிவுக் குழுவினால் பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவில் (கோப்) பணியாற்றுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

முன்னதாக, கோப் குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இராஜினாமா செய்துள்ளதாகவும், அவருக்கு பதிலாக முன்னாள் கோப் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத்தை கோப் குழுவின் உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சீரற்ற காலநிலை: 51,000 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 19

சீரற்ற காலநிலையால் 12 மாவட்டங்களில் 51,000க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை மற்றும் பலத்த காற்றினால் 12 மாவட்டங்களில் 13,176 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை, காலி, திருகோணமலை, அம்பாறை, கிளிநொச்சி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம், கேகாலை, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளதாக நிலையம் கூறியுள்ளது. கடந்த சில நாட்களில் மூன்று பேரழிவு தொடர்பான இறப்புகள் பதிவாகியுள்ளன. மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

மோசமான வானிலை காரணமாக 331 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதேவேளை, 548 குடும்பங்கள் தற்காலிக தங்குமிடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளன. (அ)

## 2023ஆம்...

கீட்டு சட்டமூல முதலாம் வாசிப்பு சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜெயந்தவால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் 2023ஆம் ஆண்டுக்கான செலவின தொகை 3 இலட்சத்து 65 ஆயிரத்து 726 கோடியே 56 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாயாக உள்ளது. இதில், விசேட செலவினமாக 2 ஆயிரத்து 509 கோடியே 75 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கான செலவினமாக 378 கோடியே 21 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் பிரதமருக்கான செலவினமாக 101 கோடியே 20 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு 85 ஆயிரத்து 625 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு 794 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு 209 கோடியே 5 இலட்சம் ரூபாயும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்துக்கு 164 கோடியே 40 இலட்சம் ரூபாயுமாக மொத்தம் 373 கோடியே 45 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், இந்து சமயம் மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்துக்கு 29 கோடியே 40 இலட்சம் ரூபாயும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்துக்கு 21 கோடியே 30 இலட்சம் ரூபாயும் இஸ்லாம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்துக்கு 18 கோடியே 40 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சுக்கு 41 ஆயிரம் கோடி ரூபாயும் - பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு 12 ஆயிரத்து 920 கோடி ரூபாயுமாக மொத்தமாக பாதுகாப்புக்கு 53 ஆயிரத்து 920 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், சுகாதார அமைச்சுக்கு 32 ஆயிரத்து 199 கோடியே 99 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாயும் - நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு 61 ஆயிரத்து 393 கோடியே 70 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயும் - வெகுசன ஊடக அமைச்சுக்கு 2 ஆயிரத்து 814 கோடி ரூபாயும் - நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு அமைச்சுக்கு 3 ஆயிரத்து 320 கோடி ரூபாயும் - வெளிவிவகார அமைச்சுக்கு ஆயிரத்து 900 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுக்கு 607 கோடியே 60 இலட்சம் ரூபாயும் - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 37 ஆயிரத்து 264 கோடியே 30 இலட்சம் ரூபாயும் - விவசாய அமைச்சுக்கு 11 ஆயிரத்து 500 கோடி ரூபாயும் - மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு 3 ஆயிரத்து 720 கோடி ரூபாயும் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சுக்கு ஆயிரத்து 130 கோடி ரூபாயும் - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு 4 ஆயிரத்து 849கோடியே 17 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும் - கல்வி அமைச்சுக்கு 23 ஆயிரத்து 200 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுக்கு ஆயிரத்து 445 கோடி ரூபாயும் - கைத்தொழில் அமைச்சுக்கு 820 கோடியே 80 இலட்சம் ரூபாயும் - கடற்தொழில் அமைச்சுக்கு 645 கோடி ரூபாயும் - சுற்றாடல் அமைச்சுக்கு 222 கோடியே 20 இலட்சம் ரூபாயும் - வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு 862 கோடியே 10 இலட்சம் ரூபாயும் - நீர் வழங்கல் அமைச்சுக்கு 7 ஆயிரத்து 437 கோடியே 41இலட்சம் ரூபாயும் மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுக்கு ஆயிர்து 520 கோடி ரூபாயும் - துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சுக்கு 367 கோடியே 60 இலட்சம் ரூபாயும் - தொழில்நுட்ப அமைச்சுக்கு ஆயிரத்து 156 கோடி ரூபாயும் - முதலீட்டு மேம்பாட்டு அமைச்சுக்கு 725 கோடியே 10 இலட்சம் ரூபாயும் - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு 687 கோடியே 30 இலட்சம் ரூபாயும் - விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சுக்கு ஆயிரத்து 20 கோடி ரூபாயும் - நீர்ப்பாசன அமைச்சுக்கு 8 ஆயிரத்து 390 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. (ஐ)

## எரிபொருள்...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலத்தை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2002ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் சட்ட மூலத்தை தற்போது திருத்தம் செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இச்சட்டத்தின் ஒரு பிரிவு மாத்திரம் திருத்தம் செய்ய விசேட சட்டமூலம் சமர்பிக்கப்பட்டது. இச்சட்டத்தின் ஊடாக இரண்டு பிரதான நிறுவனங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்யவும், விநியோகிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 85 சதவீத எரிபொருள் விநியோகத்தையும் லங்கா ஐ. ஓ. சி நிறுவனம் 15 சதவீத எரிபொருள் விநியோகத்தையும் முன்னெடுக்கிறது. தற்போதைய நிலையில் எரிபொருள் பாவனைக்கான கேள்வி அதிகரித்துள்ளது. ஆகவே, மூன்றாம் தரப்பினருக்கு எரிபொருள் இறக்குமதி மற்றும் விநியோகத்துக்கு அனுமதி வழங்க வேண்டியுள்ளது.

பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் திருத்தம் செய்யப்பட்டதை தொடர்ந்து மூன்றாவது தரப்பினரான வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எரிபொருள் இறக்குமதி மற்றும் விநியோகத்துக்கு அனுமதி வழங்கப்படும். இச்சட்ட மூலத்துக்கு எதிராக தொழில்சங்கத்தினர் பணி புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுப்படுகிறார்கள்.

தொழிற்சங்கத்தினரான அசோக ரன்வெல, ஆனந்த பாலித ஆகியோர் தற்போது சேவையில் இல்லை. இவர்கள் ஏதாவதொரு விடயத்தை பிடித்துக்கொண்டு வாழ்நாள் முழுவதும் போராட்டத்தில் ஈடுப்படுகிறார்கள். போராட்டத்திற்கு அஞ்ச போவதில்லை - என்றார். (ஐ)

## தேர்தல்களை...

கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், "தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு போராடிய கட்சியே எமது கட்சியாகும். தேர்தலை கோரி நீதிமன்றத்தைக்கூட நாடினோம். ஜனநாயகமே எமது கட்சியின் பிரதான நோக்கம். எனவே, தேர்தல்களை பிற்போட உடன்படமாட்டோம். அதனை பிற்போட வேண்டிய தேவையும் எமக்கு கிடையாது. ஏனெனில், வெற்றி என்பது எம் வசமே உள்ளது." எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

## போதை...

ளுக்கு அடிமையானவர் என்பது தெரிந்ததும் சிறுமி தொடர்பை துண்டித்துள்ளார்.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறுமி தனது சகோதரியுடன் தனியார் கல்வி நிலையம் விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்துள்ளார். அந்தச் சமயம் ஆள்நடமாட்டமற்ற பகுதியில் சிறுமியை வழிமறித்த இளைஞர் அவரை அருகிலுள்ள கட்டடத்துக்கு இழுத்து சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

அங்கிருந்து தப்பிச் சென்ற பாதிக்கப்பட்ட சிறுமியின் சகோதரி உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து அவர்களை அங்கு அழைத்து வந்த நிலையில், குறித்த இளைஞர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பருத்தித்துறையில்**

இதேபோன்று, வடமராட்சி - பருத்தித்துறையில் மனநலம் குன்றிய 66 வயது மூதாட்டியை 40 வயது நபரான போதைக்கு அடிமையான நபர் வன்புணர்வுக்கு உள்ளாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. அன்றிரவு வாகனத்தில் வந்த குறித்த நபர் அந்த மூதாட்டியின் வீட்டின் முன்பாக நின்று ஹோர்ண் ஒலி எழுப்பியுள்ளார். எட்டிப் பார்த்த மூதாட்டியை பிடித்து வாகனத்தில் ஏற்றியுள்ளார்.

இதைத் தடுக்க முயன்ற அவரின் 70 வயது சகோதரியை தாக்கி விட்டு சென்றுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இரு மூதாட்டிகளும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள தாகவும் அவரைத் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## 22ஆவது...

உதய கம்மன்பில தெரிவித்தார்.

எனினும், 22 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை தடுத்து நிறுத்துவதற்கு அமெரிக்காவில் உள்ள காகம் (பஸில்) நடவடிக்கை எடுக்குமா என்ற ஐயம் எமக்கு உள்ளது. எனவே, அமெரிக்காவில் இருந்து ஜனாதிபதிக்கு அழைப்பு வராமல் இருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம். 22ஆவது திருத்தம் தோற்குமானால் அது ஜனநாயகத்துக்கு விழுந்த அடியாக அமையும் - என்றும் கூறினார். (ஐ)

## திருமாவளவுடன்...

அவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பு ஈழத்தமிழர் நலனோம்புகைச் செயல்பாடுகள், தமிழ்த் தேசிய இனப்பிரச்னை தொடர்பில் இந்திய மத்திய அரசின் தற்போதைய நிலைப்பாடு, அந்நிலைப்பாட்டை தமிழர்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்வதற்கு நிலத்திலும், புலத்திலும் மேற்கொள்ள வேண்டிய எத்தனங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் நீண்டகாலத்தின் பின் நடைபெற்ற சிநேகபூர்வமான சந்திப்பு தன்னளவில் நிறைவானதாக அமைந்திருந்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தி. மு. கவின் மூத்த தலைவர் கே. எஸ். இராதகிருஷ்ணனுடனான சந்திப்பு அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

நீண்ட நெடிய தமிழ்த் தேசியப் போராட்ட வரலாற்றில், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் காலத்திலிருந்து தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் காலம் வரை ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துவரும் கே.எஸ் இராதாகிருஷ்ணன், ஈழ விடுதலைப் போர் மௌனிக்கப்பட்ட பின்னரும் கூட, எமது மக்களுக்காக ஓங்கி ஒலிக்கும் ஒரு குரலாகவே இருந்து வருகின்றார் என்று இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் சிறீதரன் எம். பி. தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது தமிழ்த் தேசிய இனப்பிரச்னைத் தீர்வு நோக்கிய அடுத்தகட்ட நகர்வுகள், அதில் இந்தியாவின் வகிபங்கு, அதற்காக தமிழக மற்றும் இந்திய மத்திய அரசுடனான பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள், தமிழக அரசியல் தலைவர்கள் மற்றும் மாநிலத் தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாட வேண்டிய தன் தேவைப்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து பேசப்பட்டன - என்றும் சிறீதரன் எம். பி. தெரிவித்தார். (ஐ)

## போதைபொருள்...

கடந்த சனிக்கிழமை, யாழ். போதனா மருத்துமவனை முன்பாக உள்ள இரண்டு ஆடை விற்பனை நிலையங்களில் வேலை செய்யும் நான்கு பேர் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயிரம் போதை மாத்திரைகள் மற்றும் ஒரு தொகை ஹெரோயின் போதைப் பொருள் என்பன மீட்கப்பட்டன.

இந்நிலையில், மருத்துவமனைக்கு முன்பாக போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதை தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி மாநகர முதல்வருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்துக்கு யாழ். மாநகர முதல்வர் அனுப்பிய பதில் கடிதத்திலேயே குறித்த இரு வர்த்தக நிலையங்களின் அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மருத்துவர்களின்...

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் ஓய்வு பெற வேண்டும்.

ஆண்டு இறுதிக்குள் 60, 61 மற்றும் 62 வய துடைய மருத்துவர்கள் தொடர்ந்து ஓய்வுபெற வேண்டும். எவ்வாறாயினும், இந்த வருடத்தில் 59 வயதான மருத்துவர்கள் 2023 ஆம் ஆண்டு 60 வயதைப் பூர்த்தி செய்ததன் பின்னர் ஓய்வு பெற வேண்டும்.

பொதுத்துறை ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயது 60 ஆக அண்மையில் திருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

இது தொடர்பில் அவர் வெளியிட்ட தகவலில்,

நேற்றிரவு, வங்காள விரிகுடாவில் முல்லைத்தீவுக்கு கிழக்காக 1100 கிலோமீற்றர் தூரத்தில் உருவாகியுள்ள மேலடுக்கு சுழற்சி நாளை வியாழக்கிழமை தாழமுக்கமாக மாறும் வாய்ப்புள்ளது.

இது மேலும் விருத்தியடைந்து 22 அல்லது 23ஆம் திகதி அளவில் நடுத்தர அளவிலான புயலாக மாறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இது புயலாக மாறினால் வடக்கு, வடகிழக்கு திசை நோக்கியே ( இந்தியாவின் ஒடிசா அல்லது மேற்கு வங்கம்) நகரும் வாய்ப்புள்ளது.

இதனால், வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும். அத்துடன், வெப்ப சலன செயல்பாடும் காணப்படுகிறது. எனவே கடுமையான இடிமின்னல் நிகழ்வுகளுக்கும் வாய்ப்புண்டு. குறிப்பாக, இன்று யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதியின் தலைமையில் நல்லிணக்கத்துக்கான உப குழு!

## டக்ளஸ், அலி சப்ரி ஆகியோரும் இடம்பிடிப்பு

கொழும்பு, ஒக். 19
நல்லிணக்கம் தொடர்பில் அமைச்சரவை உப குழுவொன்றை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான இந்த குழுவில் பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, அலி சப்ரி, விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கையில் வாழும் பல்லின மக்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும், வடக்கு, கிழக்கு போருக்கு பின்னரான மீள் குடியேற்றம், காணி மற்றும் காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைக்கு தீர்வை வழங்குவதற்காகவும் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களின் பிரச்னைகள், தமிழ்க் கட்சிகள், நாட்டிலுள்ள தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்து ஆராய்ந்து நல்லிணக்கம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக இந்த உப குழு நியமிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. (அ)

# சமூக பாதுகாப்பு வரியால் மூடப்பட்ட அரிசி ஆலைகள்

கொழும்பு, ஒக். 19
தென் மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகள் அடங்கலாக 50 அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளதாக சிவப்பு அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் அண்மையில் சமூக பாதுகாப்பு ஒத்துழைப்பு வரி அதிகரிக்கப்பட்டது. இதன் காரணமாக அரிசி கிலோ ஒன்றுக்கு 5 ரூபா வரி அறவிடப்படுவதாக அந்த சங்கத்தின் செயலாளர் நிமல் சிறி தெரிவித்துள்ளார்.

இதனால் தாம் கடும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கான உரிய தீர்வு அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படாவிட்டால் அரிசி ஆலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் என அவர் மேலும் கூறினார். (அ)

# நால்வருக்கு அமைச்சு பதவி வழங்க மீண்டும் மறுத்துவிட்டார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 19
எஞ்சிய அமைச்சரவை அமைச்சர்களை நியமிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வினால் முன்மொழியப்பட்ட நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் மறுத்துள்ளார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கே அமைச்சுப் பதவிகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்நிலைமையால் ஏனைய அமைச்சர்களின் பதவிப் பிரமாணம் மேலும் தாமதமாகும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# இலங்கையின் பொருளாதாரம் குறித்து அமெரிக்க அதிகாரி கொழும்பில் பேச்சு



கொழும்பு, ஒக். 19
அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ இலங் கையின் பொருளாதார நிலைமை குறித்து கொழும்பில் பேச்சு வார்த்தை நடத்துகிறார்.

அமெரிக்க - இலங்கை உறவுகள் மற்றும் இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து விவாதிப்பதற்காக டொனால்ட் லு இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இலங்கைக்கு நேற்று முன் தினம் திங்கட்கிழமை வருகை தந்துள்ள அவர், இன்று புதன்கிழமை வரை நாட்டில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடுவதற்காக இலங்கையின் மூத்த அதிகாரிகளை உதவிச் செயலாளர் லு சந்திப்பார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிராந்திய பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் பதிலளிக்கக்கூடிய, வெளிப்படையான மற்றும் உள்ளடக்கிய நிர்வாகம் குறித்தும் அவர் விவாதிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# தமிழரின் பிரச்னைகளை ஆராய அமைச்சரவை உபகுழு நியமனம்

கொழும்பு, ஒக். 19
தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்து ஆராயவும், தீர்வுகளை காண்பதற்கும் நல்லிணக்கத்திற்கான அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்த அமைச்சரவை உபகுழுவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்தன, நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஆகியோர் இந்த குழுவில் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புலம்பெயர் தமிழர்களின் பிரச்னைகள், தமிழ்க் கட்சிகள், நாட்டிலுள்ள தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்து ஆராய்ந்து நல்லிணக்கம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக இந்த உப குழு நியமிக்கப்பட்டுள்ளது. (அ)

# டீசல் விலை குறைந்தாலும் பஸ் கட்டணம் குறையாது

கொழும்பு, ஒக். 19
டீசல் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டாலும், அதனுடன் ஒப்பிடும்போது பஸ் கட்டணத்தை குறைக்க வாய்ப்பில்லை என பஸ் சங்கங்கள் தெரிவித்தன.

வாகன உதிரிப்பாகங்களின் விலையும் வேகமாக அதிகரித்துள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

இதன்படி, டீசல் விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டால் மாத்திரமே பஸ் கட்டணத்தை குறைக்க வாய்ப்பு உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்கு 53,840 ரூபா தேவை!

இலங்கையில் ஒரு தனிநபருக்கு ஒரு மாதத்துக்கு குறைந்தபட்சம் 13,460 ரூபா அடிப்படை வாழ்க்கைச் செலவுக்கு தேவை என கணக்கிடப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் மாதத்துக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஜூலை மாதத்தில், ஒரு தனிநபருக்கு அடிப்படைத் தேவைகளுக்கு 13,138 ரூபா தேவை என திணைக்களம் முன்னர் தீர்மானித்தது.

அதன்படி, நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு மாதந்தம் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 53,840 ரூபா தேவைப்படும் என மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# போதை மாத்திரைகளுடன் கைதானவர்களுக்குச் சிறை

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ்., கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியன்காடு விளையாட்டரங்க வீதியில் வைத்து உயிர்கொல்லி போதைப் மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களுக்கும், யாழ். நீதிவான் நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மின்சாதனங்கள் விற்பனை செய்யும் போர்வையில் நடமாடும் போதை மாத்திரை விநியோகத்தை அவர்கள் முன்னெடுத்து வந்தனர் என்று பொலிஸார் குற்றம் சுமத்தியிருந்தனர். கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன் தினம்முற்படுத்தப்பட்டனர்.

இருவரும் குற்றங்களை ஒப்புக்கொண்டனர். இதையடுத்து இருவருக்கும் தலா 2 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.